
விடுதலைப்புலிகள்

குரல்: 21 மாசி - பங்குனி 1991 பக்கங்கள்: 12 அன்பளிப்பு: ரூபா 7

# தமிழீழ பெண் சமூகம்

# எழுச்சிகொள்ளத் தொடங்கிவிட்டது

## பெண் விடுதலையை வலியுறுத்தி தலைவர் பிரபாகரன் செய்தி



**பழமைவாதத்திலும், மூடநம்பிக்கையிலும் ஊறிப்போன எமது சமூக அமைப்பில் நீண்ட நெடுங்காலமாக பெண்ணினம் ஒடுக்கப்பட்டு வருகிறது. எமதுவேதாந்தங்களும், மத சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக் காலம்தொட்டே பெண் அடிமைத்தனத்தை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. ஆணாதிக்கம், சாதியம், சீதனம் என்று பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவி நிற்கிறது. அவர்களது வாழ்க்கையை சிதைத்து வருகிறது.**

**அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு தலைவர் பிரபாகரன் விடுத்த செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார்.**

அவரது செய்தியின் விபரம் வருமாறு:-

இன்று அனைத்துலக மகளிர் தினம். முழு உலகமுமே இன்றைய தினத்தை பெண்ணினத்தின் எழுச்சி நாளாகக் கொண்டாடுகிறது. யுகம் யுகமாக ஆணாதிக்க அடக்குமுறையின்கீழ் ஒடுக்கப்பட்டு வந்த பெண்குலம் சம உரிமைக்காக, சமத்துவத்திற்காக, சமூக நீதிக்காக குரலெழுப்பும் புரட்சிகர தினம் இது. பெண் விடுதலையின் வரலாற்றுத் தேவையையும், அவசியத்தையும் இன்றைய தினம் குறித்து நிற்கிறது.

இந்தப் பெண் எழுச்சி தினம் தமிழீழம் எங்கும் இன்று கொண்டாடப்படுவதை யிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எமது சுதந்திர இயக்கத்தின் ஆரம்ப காலம்தொட்டே பெண் விடுதலையை ஒரு பிரதான இலட்சியமாக நாம் வரித்துக்கொண்டோம். பெண்கள் விழிப்புற்று, எழுச்சி கொண்டு, தமது சொந்த விடுதலைக்காகவும், தேசத்தின் விடுதலைக்காகவும் போராட முன்வரும்போதுதான் 'அந்தப் போராட்டம் ஒரு தேசிய போராட்டமாக முழு வடிவத்தைப் பெறும் என்ற உண்மையை நாம் அன்று தொட்டே உணர்ந்திருந்தோம்.

நாம் ஒடுக்கப்பட்டு வரும் ஒரு மக்கள் இனம். அந்நியனின் அடக்குமுறையால் நாம் அழிக்கப்பட்டுவந்த போதும் எமக்குள்ளே, எமது சமூக வாழ்வில் நாம் எம்மவர்களை மோசமான முறையில் அடக்கியொடுக்கி வருகிறோம். இப்படியாக எம் மத்தியில் நிலவி வரும் ஓர் ஒடுக்குமுறை வடிவம்தான் பெண் ஒடுக்குமுறை, பழமைவாதத்திலும், மூடநம்பிக்கைகளிலும் ஊறிப்போன

( 5ஆம் பக்கம் பார்க்க )

### வன்னி மீதான

# மும்முனைத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது

**மாங்குளம், கொக்காவில் இராணுவ முகாம்கள் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, சிங்களப் படைகள் சந்தித்த தோல்விகளை ஈடுசெய்யும் நோக்குடன் வன்னிமீது பாரிய படையெடுப்பொன்றை சிறீலங்கா அரசு நடாத்த முனைந்தது.**

**வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை உள்ளிட்ட இந்தப் பகுதிகள் மீது ஒரு வார காலம் நடைபெற்ற சிங்களப் படைகளின் படையெடுப்பை இறுதியில் முறியடித்தோம்.**

**இந்த முறியடிப்பு யுத்தத்தில் 20 போராளிகள் களப்பலியாகினர். அதே சமயம் 70 ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு அவர்களிடமிருந்து 53 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.**

கடந்த 10. 02. 1991 அதிகாலை வவுனியா மாவட்டத்திலுள்ள மாமடு, பூந்தோட்டம் இராணுவ முகாம்களிலிருந்து புறப்பட்ட சிப்பாய்கள் வன்னி மீதான இந்தப் படையெடுப்பைத் தொடக்கி வைத்திருந்தார்கள்.

வவுனியா - யாழ் பிரதான வீதிக்கு கிழக்குப் புறமாகவுள்ள இந்த முகாம்களிலிருந்து சிறிய காடுகள், வயல் வெளிகளுக்கூடாக வந்த படையினர், பிரதான வீதியில் அமைந்திருக்கும் நொச்சி மோட்டை, மாணிக்கவளவு ஆகிய இடங்களில் வைத்து வழிமறித்துத் தாக்கப்பட்டனர். இதே சமயம் வவுனியா நகரிலிருந்தும் பல்வேறு முனைகளுக்கூடாக முன்னேற முயன்ற படையினருடன் சண்டை தொடங்கியது.

மூன்று விமானங்களும், இரண்டு உலங்கு வானூர்திகளும் இப் படையெடுப்புக்கு உதவியாக குண்டுவீச்சுக்களை நடாத்திக்கொண்டிருந்தன.

பிரயாணத்திற்கும், வியாபாரத்திற்குமென பிரதான வீதியூடாகப் போக்குவரத்துச் செய்துகொண்டிருந்த பல பொதுமக்கள் மீதும், முன்னேறிவந்த இராணுவத்தினர் தாக்குதல் நடாத்தினர் விமானங்களும் தாக்குதல்களை நடாத்தின.

முதல் நாள் சண்டையில் படையினர் தாண்டிக்குளம் வரை முன்னேறி வந்தனர்.

அடுத்த நாள் 11. 02. 1991 தாண்டிக்குளத்திலிருந்து புதுக்குளம், சாஸ்திரிகூழாங்குளம் நோக்கி முன்னேறிய படையினர் எமது கடுமையான எதிர்த்தாக்குதலை எதிர்கொண்டனர்.

புதுக்குளம்வரை முன்னேறிய படை அணி ஒன்று எமது வீரர்களினால் சுற்றிவளைக்கப்

(11ஆம் பக்கம் பார்க்க )

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

# புலிகளின் குரல்

## புதிய பரிமாணத்தில் இந்தியத் தலையீடு

1983ம் ஆண்டு ஆடிக் கலவரத்தை அடுத்து தமிழீழ மக்களின் தேசியப்பிரச்சனையில் இந்திய அரசு தலையிட்டது. இந்தத் தலையீடானது இரு பரிமாணங்களில் அமைந்தது. ஒன்று, நேரடியான ராஜதந்திர தலையீடு. மற்றையது மறைமுகமான இராணுவத் தலையீடு. கொழும்பில் நிகழ்ந்த ராஜதந்திரத் தலையீட்டின் விளைவாக சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது. சமாதானப் பேச்சுக்கள் மூலம் தமிழர் பிரச்சனைக்கு தீர்வுகாண்பதே சாலச்சிறந்த வழி என இந்திய அரசு உலகத்தை ஏமாற்ற முனைந்தது. இது ஒருபுறமிருக்க, மறைமுகமாக இராணுவரீதியான தலையீடும் நிகழ்ந்தது. அதாவது தமிழரின் ஆயுத எதிர்ப்பு இயக்கத்திற்கும் இந்தியா உதவியது. இராணுவப்பயிற்சியுடன் ஆயுதங்களையும் வழங்கியது. விடுதலைப் புலிகள் இயக்கம் தனது தனித்துவத்தையும், இலட்சியத்தையும் விட்டுக் கொடாது, என உணர்ந்த இந்திய அரசு ஏனைய ஆயுதக் குழுக்களை அரவணைத்து தனக்கு விசுவாசமான கூலிப்படைகளை உருவாக்கியது. கொழும்பில் சமாதானப்பேச்சு என்ற ஒரு நாடகத்தை அரங்கேற்றி வைத்த அதேவேளை ஆயுதப் போராட்டத்தை முடுக்கிவிட்டு சிங்கள அரசுக்கு நெருக்குதலைக் கொடுக்க இந்திய அரசு முனைந்தது.

இந்த இருமுனைத் தலையீட்டின் நோக்கம் தான் என்ன? மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் ஏதோ தமிழீழ மக்களின் நலனுக்காக இந்திய அரசு தலையிடுவது போலத் தோன்றலாம். ஆனால் உண்மையில் தனது தேசிய நலனையும், பூகோள - கேந்திர இலக்குகளையும் பேணுவதற்காகவே இந்திய அரசு இவ்விதம் தலையிட்டது. மேற்குலகை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சிறீலங்கா அரசை தனது பிராந்திய வல்லாதிக்க வியூகத்தினுள் கொண்டு வருவது, அந்நிய ஊடுருவல்களைத் தடுத்து நிறுத்துவது, திருக்கோணமலைத் துறைமுகத்தை தனது கடலாதிக்கத்திற்கு உட்படுத்துவது, தமிழரின் தேசிய சுதந்திரப்போராட்டத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பது, சிறீலங்காவின் ஒற்றையாட்சி அரசியல் யாப்பின்கீழ் ஒரு தீர்வைத் திணிப்பது— இப்படியான இலக்குகளை அடையும் நோக்கத்துடன்தான் இந்தியத்தலையீடு அமைந்தது. சரியாக நான்கு ஆண்டுகளின் பின்னர், அதாவது 1987ம் ஆண்டு ஆடி மாதம் செய்துகொள்ளப்பட்ட ராஜீவ் — ஜே. ஆர் ஒப்பந்தம் இந்த இலக்குகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக அமைந்தது.

தனது ஏகாதிபத்திய நலன்களைப்பேணும் நோக்கில் சிங்களப் பேரினவாதத்துடன் கூட்டுச் சேர்ந்து தமிழீழ மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தை பாரதநாடு ஏப்பம்விட முனைந்ததால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தது. இந்த ஒப்பந்தம் தமிழீழ மக்களின் நலன்களுக்கு பாதகமானது எனக் கண்டித்தது. தமிழீழத் தனியரசே தமிழரின் தேசியப் பிரச்சனைக்கு இறுதியான, முடிவான தீர்வு; என எமது இயக்கத்தலைவர் பிரபாகரன் பகிரங்கமாக பிரகடனம்செய்தார். புலிகளின் நிலைப்பாடு பாரத நாட்டுக்கு ஒரு பெரிய சவாலாக அமைந்தது. புலிகளின் சவாலை எதிர்த்து தனது விரிவாதிக்கக்கொள்கையின் விதிகளடங்கிய ஒப்பந்தத்தை ஆயுதமுனையில் நடைமுறைப்படுத்த இந்தியா முடிவெடுத்தது. இதனால் இந்தியாவின் நேரடி இராணுவத் தலையீட்டை புலிகள் இயக்கம் எதிர்கொள்ள நேர்ந்தது. இந்திய — புலிகள் யுத்தம் வெடித்தது. உலகத்தின் மிகப்பெரிய இராணுவத்தை எதிர்த்து. இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி, விடுதலைப்புலிகள் ஒரு மாபெரும் வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டினர். இந்திய — இலங்கை ஒப்பந்தம் செயலிழந்து செத்துப்போனது. புலிகளின் உறுதியான எதிர்ப்பியக்கம் காரணமாக இந்திய அரசின் அரசியல் — பூகோள — கேந்திர நோக்கங்கள் எல்லாம் தவிடுபொடியாகியது. இறுதியில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் அவமானத்திற்கு ஆளாகி தமிழீழ மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்டது. இந்தியாவின் ராஜதந்திர இராணுவத்தலையீடு ஒரு இமாலயத் தவறென முழு உலகமுமே விமர்சித்தது. இந்த தோல்விகளால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து விடுபட இந்திய வெளிவிவகாரத்துறை விற்பன்னர்களுக்கு பல மாதங்கள் பிடித்தன. சென்ற ஆனியில் சிறீலங்கா — தமிழீழ யுத்தம் மூண்ட போதும், 'இது ஓர் உள்நாட்டுப்பிரச்சனை' என வர்ணித்து, இந்திய அரசு மௌனம் சாதித்தது. வெறும் பார்வையாளராக இருந்து யுத்தத்தின் போக்கை உன்னிப்பாகக் கவனித்து வந்தது.

இந்திய அரசு முற்றாக ஒதுங்கிக்கொண்டதால் தமிழீழ மக்களின் நலனில் அக்கறை கொண்ட உலகநாடுகள் தமிழர் பிரச்சனையில் மத்தியஸ்துவம் வகிக்க முன்வந்தன. அவுஸ்திரேலியா, கனடா, பிரிட்டன், நோர்வே, சுவீடன் போன்ற நாடுகள் தமிழர் பிரச்சனையை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச்செல்ல மேற்கொண்ட முயற்சியை நாம் ஆதரித்தோம். இந்த நாடுகளின் ஆலோசனையின் பேரிலேயே நாம் ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தப் பிரகடனம் செய்து நிபந்தனையற்ற பேச்சுக்கும் இணங்கினோம். வெளிநாடுகளின் இந்தக்குறுக்கீட்டை இந்தியா விரும்பவில்லை. தனது பிரதேச ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சிறீலங்காவும், தமிழீழமும் சர்வதேச அரங்கில் பேச்சுக்களை நடாத்துவது தனது பூகோள நலன்களுக்குப் பாதகமாக அமையலாமென இந்திய ஆளும் வர்க்கம் பயந்தது. சர்வதேச அரங்கில் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுமானால் தனது உள்நாட்டு ஒடுக்குமுறைக் கொள்கைக்கு அது அச்சுறுத்தலாக அமையலாமெனவும் இந்தியா அஞ்சியது. இது ஒருபுறமிருக்க, சிறீலங்கா அரசு சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் நெருங்கிய நட்புறவை வளர்த்து பெருமளவில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதும் இந்தியாவுக்கு எரிச்சலை ஊட்டியது. தான் மௌனமான வெறும் பார்வையாளராக இருந்துவந்தால் பிரச்சனை தனது கையை விட்டு நழுவிவிடுமோ என அஞ்சிய இந்திய அரசு மீண்டும் இலங்கையில் தலையிட முடிவு செய்திருக்கிறது. இந்தத் தலையீடு ஒரு புதிய பரிமாணத்தில் அமைந்திருக்கிறது.

தமிழீழ மக்களின் இனப்பிரச்சனையை மையமாக வைத்து, தமிழரின் நலன்காக்கும் தார்மீகக் காவலன் என்ற போர்வையில் முந்திய இந்தியத் தலையீடுகள் அமைந்ததைக் காணலாம். அப்பொழுது தமிழரின் பாதுகாப்பு முதன்மைப்படுத்தப்பட்டது. தமிழரின் அரசியல் அபிலாசைகள் பேணப்படுவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. ஈழத்தமிழர் பிரச்சனையில் அக்கறை கொண்டிருந்த தமிழ்நாட்டு மக்களை திருப்திப் படுத்துவதும் இந்திய அரசின் அன்றைய நோக்கமாக இருந்தது. ஆனால் இந்தியாவின் இன்றைய தலையீடு வித்தியாசமான அணுகுமுறையைக் கொண்டிருக்கிறது. இம்முறை தமிழீழ மக்களின் தேசியப்பிரச்சனை முற்றாகக் கைவிடப்பட்டிருக்கிறது. தமிழரின் பாதுகாப்பு பற்றியோ அல்லது அவர்களது அரசியல் அபிலாசைகள் பற்றியோ எவ்வித அக்கறையும் காட்டப்படவில்லை. தமிழர் நலன்காக்கும் பழைய ராஜதந்திர நாடகத்தை முற்றாகக் கைவிட்டு, சிங்களவர் நலன்பேணும் புதிய ராஜதந்திர நாடகம் ஒன்றை இந்தியா கொழும்பில் அரங்கேற்றியுள்ளது. இதில் சிறீலங்காவின் தேசியநலன், தேசிய ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு தேவைகள், கூட்டுப்பொருளாதார முயற்சிகள் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கூட்டுப் பொருளாதார முயற்சி என்ற திட்டத்தின்கீழ் சிங்கள அரசும் இந்தியாவும் ஒன்றுசேர்ந்து தமிழீழத்தின் மூலவளங்களை சுரண்டுவதற்கு திட்டமிடுகின்றன. இதன் ஆபத்துபற்றி பின்னர் பார்ப்போம்.

இந்தியாவின் இந்தப் புதிய தலையீடு தமிழீழ மக்களின் தேசிய நலன்களுக்கு பாதகமாக அமையும் என்பதில் ஐயமில்லை. சிங்கள அரசின் நட்புறவையும், நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் பெற்றுக்கொண்டு தனது தேசியநலனை அடைவதற்காக தமிழீழ மக்களின் நியாயமான போராட்டத்திற்கு துரோகம் இழைக்க இந்திய அரசு சற்றேனும் தயங்காது என்பதை டெல்லி ஆட்சியாளரின் சமீபகால நடவடிக்கைகளும், இந்திய ராஜதந்திரிகளின் அறிக்கைகளும் பேட்டிகளும் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் சிறீலங்காவுடன் புதிதாக நட்புறவை வளர்த்துக் கொள்ள விரும்பிய டில்லி ஆட்சிபீடம், சுக்ளாவை கொழும்புக்கு அனுப்புவதற்கு முன்னதாக தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கைகளில் இறங்கியது. முதலில் எமது விடுதலை இயக்கத்தை மாசுபடுத்தும் அபாண்டமான பொய்ப்பிரச்சாரங்களை இந்திய அரசு திட்டமிட்டுச்செய்தது. பின்னர் தமிழ் நாட்டில் சிகிச்சைபெற்றுவந்த எமது போராளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டனர். எமது சக்திவாய்ந்த தகவல் தொடர்பு சாதனங்கள் பறித்தெடுக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் சிகரம் வைப்பதுபோல சுக்ளா கொழும்பில் இருந்த சமயம், விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாக பொய்யான காரணம்காட்டி தமிழ்நாட்டு அரசு கலைக்கப்பட்டது. நாம் விடுதலைப்புலிகளுக்கு விரோதமானவர்கள், தமிழரின் சுதந்திரப் போராட்டத்திற்கு எதிரானவர்கள், இந்திய மண்ணில் செயற்பட புலிகளுக்கு ஒருபோதும் இடமளியோம் என்பதை சிங்கள அரசுக்கு செயல் மூலம் நிரூபித்துக்காட்டி பிரேமதாசாவின் நம்பிக்கையைப் பெற இந்தியா விரும்பியது. புலிகளுக்கு எதிரான யுத்தத்தால் ஆட்டம்கண்டிருக்கும் பிரேமதாசாவுக்கு, இந்திய அரசு முண்டு கொடுக்க முன்வந்தது பெரும் மகிழ்ச்சியை அளித்தது. பாரத அரசின் உலகளாவிய ராஜதந்திரத் திரைக்குப்பின்னால் ஒளித்து நின்று தமிழருக்கு எதிரான இனப்படுகொலையைத் தொடர்ந்து நடாத்தலாம் என எண்ணினார் போலும்.

உள் நாட்டில் சுயநிர்ணய உரிமைப்போராட்டங்களுக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு என்னவென்பதை சிங்கள ஆளும்வர்க்கம் நன்கறியும். சிறீலங்காவின் இனவாத அடக்குமுறைக் கொள்கை எப்படியானது என்பதை இந்திய ஆளும் வர்க்கம் நன்கறியும். எனவே ஒரு பொதுவான இலட்சியத்தில் இரு ஆளும்வர்க்கங்களும் ஒன்றிணைந்து செயற்பட முன்வந்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இந்தப்பொது இலட்சியத்தில் தமிழர் நலன்கள் பாதிக்கப்படுவதை இந்தியா பொருட்படுத்தாது. அதேபோல, இந்தப்பொதுவான குறிக்கோளை அடைவதற்கு இலங்கைத் தீவின் இறைமைக்கு பங்கம் ஏற்படுவதையும் சிறீலங்கா பொருட்படுத்தாது.

இந்தப் புதிய ராஜதந்திர தலையீட்டில், இந்தியா, தமிழர் பிரச்சனையை எப்படி அணுகுகிறது, எந்த வகையில் சிறீலங்காவுக்கு உதவியளிக்க விரும்புகிறது, தமிழர் தாயகத்தின் நில வளங்கள் எப்படிச் சுரண்ட விழைகிறது, என்பதை தெளிவாக விளக்கும் வகையில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா சமீபத்தில் (17.2.91) 'ஐலன்ட்' ஞாயிறு இதழுக்கு ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார்.

இந்தப் பேட்டியிலிருந்து பழைய ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தத்திற்கமைய செத்துப்போன மாகாண சபைக்கு புத்துயிர் ஊட்டவே இந்தியா விரும்புகிறது என்பது தெளிவாகிறது. அதுவும் தேர்தல் நடத்தாமல், புலிகள் இயக்கத்தை ஒதுக்கி விட்டு, இடைக்கால மாகாண சபை நிர்வாகம் ஒன்றை நிறுவி, இந்தியாவின் அடிவருடிகளாக இயங்கிய இனத் துரோகக் குழுக்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென ஆலோசனையும் கூறப்படுகிறது. யுத்தம் ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் பரவாயில்லை, இப்படியான ஒரு இடைக்கால நிர்வாகம் அமையப் பெற்றால் தமிழரையும் திருப்திப்படுத்தலாம், அதே வேளை புலிகளையும் அரசியல் ரீதியாக அந்நியப்படுத்தி விடலாம் என்பது போல அவரது கருத்து அமைகிறது. சீனாவிடமிருந்து குண்டு விமானங்களை பெறுவதில் இந்தியாவுக்கு ஆட்சேபனை இல்லையென்றும், ஏனென்றால் இவ்விமானங்கள் உள்நாட்டுப் பாதுகாப்புத்தேவைகளுக்காகவே பயன்படுத்தப்படுகிறது என்றும் ஜா கூறுகிறார். "பயங்கரவாதிகளின் நிலைகளை அழிப்பதற்கு விமானங்கள் பாவிக்கப்படுவது நியாயமானதே. ஆனால் இந்த விமானத் தாக்குதல்களால் வடக்கில் பெருந்தொகையில் பொதுமக்கள் உயிரிழப்பதாக தொடர்ந்து செய்திகள் வெளியாகிவருகின்றன. கடந்த மாசி 7ம் திகதி சிறீலங்காவுக்கு உதவியளிக்கும் நாடுகளின் மாநாடு நடைபெற்றது. திரு. பாஸ்கரலிங்கமும் இதில் கலந்து கொண்டார். அப்போது மேற்கத்தைய நாடுகள் குறிப்பாக முக்கிய உதவி வழங்கும் நாடுகள் எல்லாம் இந்த முழு விவகாரம் பற்றி (குண்டு வீச்சுப் பற்றி) ஆழ்ந்த அதிர்ச்சியை தெரிவித்தார்கள். நாம் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை' எமக்கு உங்கள் பிரச்சனை நன்கு புரியும். விமானப்பலத்தைக் கொண்டு கிளர்ச்சிகளை நசுக்குவது முற்றிலும் நியாயமானதே. ஆனால் அந்தக் குறிக்கோளுக்கு அமைய நீங்கள் அதனைப் பிரயோகிக்க வேண்டும்" என்கிறார் இந்திய தூதுவர். இந்தக் கூற்றிலிருந்து ஒன்று தெளிவாகிறது. சிறீலங்கா குண்டுவீச்சு விமானங்கள் வாங்குவதையோ அல்லது குண்டு வீச்சுக்கள் நடத்துவதையோ இந்தியா ஆட்சேபிக்கவில்லை- ஆனால் குண்டுவீச்சு காரணமாக பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்படும் தகவல்கள் வெளியுலகத்திற்கு எட்டி வருவது இந்தியாவுக்கு சங்கடத்தை கொடுக்கிறது. மேற்குலகமே அதிர்ச்சியடையும் போது இந்தியா மௌனம் சாதித்து வருகிறது. சிறீலங்காவை பகைத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காக உண்மை தெரிந்தும் உலக அரங்கில் இந்தியா ஆட்சேபனைக்குரலெழுப்பவில்லை. தமிழரின் இனப்படு கொலையை மூடிமறைக்க இந்தியாசிங்கள அரசுக்கு துணைபோகிறது என்பதுதான் இதன் அர்த்தம்.

ஆண்டுதோறும் இந்தியாவில் 700க்கும் 800க்கும் இடைப்பட்ட தொகையில் சிங்கள இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுவதாக தகவலை வெளியிட்ட இந்தியத் தூதுவர் சிறீலங்காவின் ஆயுத தேவைகளைப் பூர்த்திசெய்யவும்

( 9 ஆம் பக்கம் பார்க்க )

www.eelamview.com

# தமிழீழத் தேசியக் கொடி

தேசிய சுதந்திரத்தை வேண்டிநிற்கும் ஒரு மக்கள் சமுதாயத்திற்கு ஒரு தேசியக்கொடி இன்றியமையாதது. தேசிய தனித்துவத்தையும், ஒருமைப்பாட்டையும், இறைமையையும் ஒரு தேசியக்கொடி சித்தரித்துக்காட்டுகிறது. தேசாபிமானத்தின் சின்னமாகவும் அது திகழ்கிறது. அரசியல் சுதந்திரத்தின் ஆணிவேரான குறியீடாகவும் தேசியக்கொடி அமைகிறது.

தேசிய விடுதலையை இலட்சியமாகக்கொண்டு போராடி வரும் தமிழீழ மக்களுக்கு ஒரு தேசியக்கொடி உண்டு. சென்ற ஆண்டு இரண்டாவது மாவீரர் நாளன்று (27.11.1990) புலிக்கொடி தமிழீழத்தின் தேசியக்கொடியாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது.

எமது தேசியக் கொடியை சித்தரித்துநிற்கும் புலிச்சின்னம் எப்படித் தோற்றம் கொண்டது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? அந்தக் குறியீட்டின் அர்த்த பரிமாணங்கள் என்ன? என்பதை பிரகடனப்படுத்துகின்றோம்.

சரியாகப் 19 ஆண்டுகளுக்கு முன்னர், 1972ம் ஆண்டு எமது தேசியத் தலைவர் பிரபாகரன் தமிழீழ சுதந்திர இயக்கத்திற்கு அத்திவாரமிட்டார். அன்று அவர் ஆரம்பித்த ஆயுத எதிர்ப்பு இயக்கத்திற்கு தமிழ்ப் புதிய புலிகள் எனப் பெயரிட்டார். பின்னர் 1976ம் ஆண்டில் தமிழ்ப்புதிய புலிகள் என்ற எமது அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகள் எனத் தலைவரால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து தமிழீழ தேசத்தின் தனித்துவத்தையும், தமிழீழ விடுதலை இலட்சியத்தையும் சித்தரிக்கும் சின்னமாக புலிச்சின்னம் விளங்கியது.

புலிச் சின்னத்தை தமிழீழத்தின் தேசிய சின்னமாக பிரபாகரன் தேர்ந்தெடுத்ததற்கு காரணமுண்டு. புலிச்சின்னம் திராவிடர் நாகரீகத்தில் வேரூன்றி நிற்கும் ஒரு படிமம். தமிழரின் வீர வரலாற்றையும், தேசிய எழுச்சியையும் சித்தரித்துக்காட்டும் குறியீடு. வலிமையையும், வீரத்தையும், தன்னம்பிக்கையையும் குறித்துக்காட்டும் சின்னம். அன்று வீரவரலாறு படைத்த சோழ மன்னர்களும் புலிக்கொடியின் கீழ் தமிழனை எழுச்சிகொள்ளச் செய்தனர். தமிழுணர்வை, இன உணர்வை, தேசியப்பற்றுணர்வை, பகைவனுக்கு அஞ்சாத வீரவுணர்வை, பிரதிபலிக்கும் ஆழமான, அற்புதமான குறியீடாகத்திகழ்கிறது புலிச் சின்னம்.


ஐந்நூறு ஆண்டுகாலத்திற்கு மேலாக அந்நியர்களாலும். அயல் நாட்டுச் சிங்களவர்களாலும் அடிமைப்பட்டுக் கிடந்த ஈழத் தமிழினத்தை ஆயுதப் போராட்டப் பாதையில் வழி நடாத்த முன்வந்த எமது தலைவன் அன்று புலியை தேசிய விடுதலை இயக்கச் சின்னமாகத் தேர்ந்தெடுத்தது மிகவும் மதிநுட்பம் வாய்ந்த ஒரு முடிவு. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு.

புலிச்சின்னம் தேசிய சின்னமாக மக்களின் உணர்வுகளில் ஆழமாகப் பதிந்தது. செத்துப் போய்க் கிடந்த தமிழ்த் தேசிய ஆன்மா புத்துயிர் பெற்றது. இன்று எமது தேசியக் கொடியாகிய புலிக்கொடியின் கீழ் தமிழீழ தேசிய இனம் ஒன்றுபட்டு நிற்கிறது. எழுச்சி கொண்டு நிற்கிறது.

எமது தலைவர் பிரபாகரன் தாம் உருவாக்கிய விடுதலை இயக்கத்திற்கு புலிகள் என்ற பெயரை தேர்ந்தெடுத்ததற்கு இன்னுமொரு காரணமும் உண்டு.

நீண்ட கால அடிமைத் தனத்தில் ஊறிப்போன ஒரு சிறிய தேசிய இனம் ஒரு பெரிய தேசிய இனத்தின் நவீனமான, பலம் மிக்க ஆயுதப் படைகளை எதிர்த்துப் போராடுவது எப்படி? இராணுவ பலம் மிக்க ஒரு அரசுக்கு எதிராக ஆயுதப்போராட்டத்தை வெற்றிப்பாதையில் முன்னெடுத்துச் செல்வதாயின் சிறப்பான, விசேடமான போர்க் குணங்களைக் கொண்ட ஒரு விடுதலைப் படை உருவாக்கப்பட வேண்டும். அபாரமான துணிவும், சாவுக்கும் அஞ்சாத வீரமும், விடுதலை வேட்கையும் கொண்ட வீரர்களை உருவாக்க வேண்டும். மனித வேங்கைகளை உருவாக்க வேண்டும். புலிபோல வேகத்துடனும், மூர்க்கத்துடனும் போராடும் தலைசிறந்த வீரர்களை உருவாக்க வேண்டும். இந்த நோக்கில் தான் புலிப்படையை கட்டி எழுப்பினார் பிரபாகரன். பிரபாகரனின் புலிப்படை இன்று உலகின் தலைசிறந்த விடுதலை இராணுவமாக போற்றப்படுகிறது.

இன்று எமது தேசியக் கொடியில் பொறிக் கப்பட்டிருக்கும் புலிச் சின்னத்தின் உருவப் படம் பிரபாகரனின் கருத்திற்கு அமையவே வரையப்பட்டது. பிரபாகரனின் நண்பரும் மதுரையைச் சேர்ந்த பிரபல ஓவியருமான நடராஜன் என்பவர் 1977ம் ஆண்டு புலிச் சின்னத்தின் உருவப்படத்தை வரைந்தார். பிரபாகரனின் யோசனைக்கு அமைய பல தடவைகள் வரைந்து, இறுதியில் எமது தலைவரின் எண்ணப்படம் புலிச்சின்னமாக உருவகம் பெற்றது. இந்தப் புலிச் சின்னம் இன்று எமது தேசியக்கொடியை அலங்கரிக்கிறது. சுதந்திரத் தமிழீழத்தின் தேசியக் கொடியாகவும் ஒரு நாள் உயர்த்தப்படவிருக்கும் இக்கொடியில் சித்தரிக்கப்பட்டுள்ள குறியீடுகளின் அர்த்தங்களை இனிப்பார்ப்போம்.



எமது தேசியக் கொடியை மூன்று நிறங்கள் அலங்கரிக்கின்றன. மஞ்சள், சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்கள்.

தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு. அந்தத் தாயகம் அவர்களது சொத்துரிமை. தமிழீழ மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு தன்னாட்சி (சுயநிர்ணய) உரிமை உண்டு. இந்த தன்னாட்சி உரிமை அவர்களது அடிப்படை அரசியல் உரிமை. தமது தாயகத்தை மீட்டெடுத்து, தன்னாட்சி உரிமையை நிலை நாட்டுவதற்காக தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது. மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கிறது.

தேசிய சுதந்திரம் பெற்று தமிழீழ தனியரசை அமைத்து விட்டாற்போல நாம் முழுமையாக விடுதலைபெற்றதாகக் கொள்ள முடியாது. தமிழீழ சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். வர்க்க, சாதிய முரண்பாடுகள் அகற்றப்பட வேண்டும். பெண் அடிமைத்தனம் நீக்கப்பட வேண்டும். இதற்கு சமுதாய அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டுவரவேண்டும். சமத்துவமும், சம தர்மமும், சமூக நீதியும் நிலை நாட்டப்படவேண்டும். இப்படியான புரட்சிகரமான சமூதாய மாற்றத்தை வேண்டி எமது அரசியல் இலட்சியத்தை சிவப்பு நிறம் குறியீடு செய்கிறது.

விடுதலைப்பாதை கரடுமுரடானது. சாவும் அழிவும், தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இத்தனையையும் தாங்கிக் கொள்ள இரும்பு போன்ற இதயம் வேண்டும். அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். என்றும் தளராத உறுதி வேண்டும். கறுப்பு நிறம் மக்களின் மன உறுதியை குறித்துக் காட்டுகிறது

தேசியக் கொடியின் மையத்தில் புலிச் சின்னம் அமையப்பெற்றிருக்கிறது. ஆவேசத்துடன் பாயும் புலியை குறிப்பதாக புலியின் தலையும், முன்னங்கால்களும் சித்தரிக்கப்பட்டுள்ளது. புலிச் சின்னத்தின் அர்த்தம் பற்றி மேலே விளக்கியிருந்தோம். தமிழ்த் தேசாபிமான எழுச்சியை மட்டுமன்றி வலிமையையும், வீராவேசத்தையும் புலிச் சின்னம் குறித்து நிற்கிறது. பாயும் புலியை ஒத்த எமது வீரவிடுதலைப்போரையும் அது சித்தரிக்கிறது. புலித் தலையை சுற்றி வட்டமாக ரவைகளும், இருபுறத்திலும் கத்திமுனையுடைய துப்பாக்கிகளும் எமது ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டத்தை குறியீடு செய்கின்றன.

ஒட்டு மொத்தத்தில், எமது தேசியக்கொடி, சுதந்திரத்தையும் சமதர்மத்தையும் வேண்டி நாம் நடாத்தும் வீரவிடுதலைப் போரை அற்புதமாகச் சித்தரிக்கிறது. தமிழரின் வீர மரபில் வேரூன்றி நின்று பிறப்பிக்கப்போகும் தமிழீழத் தனியரசின் குறியீட்டு வடிவமாகவும் எமது தேசியக்கொடி திகழ்கிறது.

## முத்தமிழ் விழா

எதிர்வரும் சித்திரைத் திங்கள் 6-ம் நாளில் இருந்து 15-ம் நாள்வரை தமிழீழக் கலைஞர்கள் அனைவரையும் ஒன்று திரட்டிய ஒரு முத்தமிழ் விழாவை நடாத்த நாம் முடிவு செய்துள்ளோம். இவ் விழாவில் தமிழீழத்தின் பலநூறு கலைஞர்கள், கல்வி மான்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் கலந்துகொள்ளும் அரங்குகள் இடம்பெறுகின்றன.

இயல், இசை, நாடகமாகிய முத்தமிழையும் உள்ளடக்கிய 9 நாட்கள் இவ்விழா நடைபெறும்.

இறுதி நாளான 10-ம் நாள் எமது இயக்கம் அறிமுகப்படுத்தும் "தமிழீழத் தேசிய விருது" இந்த மண்ணுக்கு அளப்பரிய சேவையாற்றிய பல துறைகளையும் சார்ந்த 10 மாமனிதர்களுக்கு வழங்கப்படும்.

கவியரங்கம், பட்டிமன்றம், சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள். வாத்திய இசைகள், நடனம், நாட்டிய நாடகம், பாரம்பரிய கருத்துக்கள், நவீன நாடகங்கள் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும் இந்த முத்தமிழ் விழாவை விடுதலைப் புலிகள் கலை கலாச்சாரப் பிரிவு ஒழுங்குசெய்து நடாத்துகின்றது.

இங்கு இடம்பெறும் நிகழ்வுகள் எமது விடுதலைப் போராட்டத்தை மக்களுக்குத் தெளிவுபட விளக்குவதாகவும் எமது தேசியத்தை எடுத்தியம்புவதாகவும் இருக்கும்.

இந்த விழாவை ஒட்டி மிகப்பெரிய விழாச்சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கின்றது.

www.eelamview.com




1967, முல்லைத்தீவு வைத்திய சாலை.

மகேஸ்வரிக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருந்தது. பிஞ்சிலேயே இரண்டும் ஒரே மாதிரி இருந்தது. இவர்களுடன் அவளுக்கு நான்கு பிள்ளைகளாயிற்று. அவளால் நிமிரமுடியவில்லை. இரண்டு கைகளாலும் குழந்தைகளை வருடிக் கொண்டிருந்தாள், மனசு நிறைந்து சந்தோசமாக இருந்தது.

" சீ, நாலும் பெடியளாய்ப் போச்சுது, ஒண்டெண்டாலும் பெட்டையா இருக்கக் கூடாதா " என சலித்துக் கொண்டாள்.

" அதுக்கென்னப்பா, அடுத்தது பொம்பிளைப் பிள்ளையா இருக்கும் தானே," என மெல்லமாகவே அரசரட்ணம் சொன்னார்.

" அடுத்ததோ " தாய்மையின் வேதனை கோபமாக வெளிவந்தது.

" சரி, சரி " எனச் சொல்லிக் கொண்டே அரசரட்ணம் ஒதுங்கினார்.

" இங்க, எல்லாம் மாறித்தான் நடக்குது " என அம்மம்மாக் கிழவி முணுமுணுத்தாள். அவரின் பயந்த சுபாவத்தை அவள் குத்திக் காட்ட ஒருநாளும் தவறுவதில்லை.

இதென்னடா, கிழவி மானத்தை வாங்குகிறாள் என நினைத்த படியே அவர் வெளியே வந்தார்.

வைத்திய சாலைப் படியில் காலை வைத்ததுமே, அரசரட்ணம் நிமிர்ந்து பார்த்தார். எதிரே, முல்லைத்தீவு இராணுவ முகாம், பதினைந்து இருபது பச்சை உடை அணிந்தவர்கள் — இரண்டாம் உலக யுத்தத்திற்கு முதல் பாவித்த ஆயுதங்களுடன் இருந்தனர். சிலர், ஒரு பழைய ஜீப் வண்டியைத் தள்ளியபடி அங்கும், இங்கும் ஓடித்திரிந்தனர். அது இன்றைக்கு ஓடப் போவதில்லை, என்பது அவருக்குத் தெரிந்தது.

ஆனால், இவர்கள் ஏன் இங்கே இருக்கிறார்கள்.?

அவருக்கு விளங்கவில்லை, புரியாத மொழி, விளங்காத இடம், வேலையில்லாத இவர்கள், ஆட்களைக் கொல்லும் ஆயுதங்களுடன் ஏன் இங்கு வந்தார்கள்?

யோசித்தபடி, இராணுவ முகாமைக் கடந்து அவர் நடந்தார். முல்லைத்தீவிலிருந்து மாங்குளம் செல்லும் அந்த நெடுஞ்சாலையின் இரு பக்கத்து வயல் வெளிகளிலும் பூத்துக் குலுங்கும் நெற்கதிர்கள், அவருடன் கதை பேசின. அந்த அழகை ரசித்த படியே அவர் நடந்தார். தூரத்தில் வற்றாப்பளை அம்மன் கோயில் இருளில் மூழ்கி மங்கலாகத் தெரிந்தது.

அவர்கள், பிள்ளைகளுக்கு சுதன், மதன் எனப் பெயர் வைத்தனர். அதன் பின்பும் மகேஸ்வரிக்கு அடுத்தடுத்து இரண்டு பெண் குழந்தைகள், பிறந்தனர். ஆறு குழந்தைகளும், அவரும், வீடும் தான் அவளுடைய உலகம்.

அவர்களின் வாழ்வுக்காகவே அவள் வாழ்ந்தாள்.

O O O

மாமூலை, மிக அழகான கிராமம். காட்டுக்கு உள்ளே வீடுகளைக் கட்டின மாதிரி கிராமம் முழுவதும் மாமரங்களும், பலா மரங்களும் சடைத்து வளர்ந்திருந்தது. கிராமத்தைச் சுற்றியோடும் செம்மண் வீதி மனிதர்களைச் சிவப்பாக்கத் தவறுவதில்லை. அருகில், இருளாகத் தெரியும் காட்டிலிருந்து வரும் குரங்குகள், ஆக்களில்லாத வீட்டைத் தேடிக் கொண்டு திரியும்.

மகேஸ்வரிக்கு குரங்குகளைக் கலைப்பதே ஒரு வேலையாகப் போய்விட்டது. அதனால் அவள் எப்பவுமே கோபமாகத்தான் நிற்பாள், ஆனால், வீட்டுக்கு முன்னால் நிற்கும் வேப்பமரத்திற்குக் கீழ வந்துவிட்டால் மட்டும் ஏனோ அவள் அமைதியாகி விடுவாள்.

" சின்னனா நின்ற வேம்பைத் தறியாமல் விட்டது, எவ்வளவு நல்லதாப் போச்சுது பாத்தீங்களே, இப்ப எவ்வளவு பெரிசா, கிளைபரப்பி நிக்குது. எங்கட வீட்டில ஓராள் மாதிரியும் போட்டுதப்பா " என்றாள் மகேஸ்வரி.

அரசரட்ணம், முற்றத்தில் நின்ற வேம்பை நிமிர்ந்து பார்த்தார், உண்மைதான் காலம் எவ்வளவு விரைவா போய்விட்டது. எனக்கும் வயசு போயிட்டுது. இந்த வேம்பைப் போல என்னுடைய பிள்ளைகளும் வளர்ந்து விட்டார்கள். அது மட்டுமா சிங்களக் குடியேற்றங்கள் எங்களை எவ்வளவு நெருங்கி வந்துவிட்டது. சின்னதாக இருந்த முல்லைத்தீவு இராணுவ முகாமும் பெரிதாகி, ஆயுதப் படைகளின் அநியாயங்களும் சொல்லமுடியாதளவிற்கு அதிகரித்து விட்டது.

" காலங் கெட்டுப் போய்க் கிடக்குது. ஏங்க இவங்களொருத்தரையும் காணேலை. " என்றாள் மகேஸ்வரி.

" ஏனப்பா, பிள்ளையளைத் திட்டிற, சின்னவன் வயலுக்குப் போட்டான், மற்றவங்கள் இங்கதான் எங்கையும் நிப்பாங்கள்."

அவள், ஏதோ ஏசியபடியே மாமரத்தில் நின்ற குரங்குகளை விரட்டிக் கொண்டு சென்றாள். ஆனால் மகேஸ்வரியின் வாழ்வில் அன்றுதான் முதற் புயலடித்தது. காட்டுப் பாதையால் வயலுக்குச் சென்ற அவளது இரண்டாவது மகனை அவள் அன்று தொடக்கம் காணவேயில்லை.

மகேஸ்வரி இடிந்துபோய் நின்றாள். அவளால் தாங்க முடியவில்லை. தன் மகன் வருவான், வருவான் எனக் காத்திருந்தாள்.

காலம் ஓடிக் கொண்டே இருந்தது, சிங்களக் குடியேற்றங்கள் நெருங்கி வந்து கொண்டே இருந்தன. முல்லைத்தீவின் கரையோரங்கள் முழுவதும் சிங்களவர்கள் நிறைந்தனர். அந்த மண்ணைத் துயரம் சூழ்ந்து கொண்டது, தமிழர்கள் பலர் கடலிலும், வயல்களிலும் காணாமல் போகத் தொடங்கினார்கள்.

போராட்டம் கருக்கொள்ளத் தொடங்கியது.

அரசரட்ணத்தின் முதலாவது மகனும், இரட்டையர்களில் ஒருவனும் இயக்கத்திற்குச் சென்று விட்டார்கள்.

O O O

மகேஸ்வரியின் வீடு இப்போ வெறிச்சோடி விட்டது. அவளுக்கு அன்பையும் பாசத்தையும் கொட்ட சுதன் ஒருவன் தான் வீட்டில் நின்றான். அவளுடைய ஆசை பாசம், எதிர்பார்ப்பு எல்லாமே அவனைச் சுற்றித் தான் இருந்தது. சுதனுக்கும் தெரியும்.

" தம்பி, அம்மாவுக்காக நீ வீட்டில நின்று கொள். தங்கச்சி இரண்டு பேரையும் கவனமாகப் பார்த்துக் கொள் " என்று அவனது சகோதரர்கள் சொல்லிவிட்டுச் சென்றதை அவன் மறக்கவில்லை.

போராட்டம் வளர்ந்தது. புலிகள் வெற்றிகளைக் குவித்தனர். இந்த நேரத்தில்தான், இந்தியப் படைகள் எம் தேசமெங்கும் தேச விரோதிகளுடன் பரவினார்கள். தமிழீழ மண் குருதியினால் நனைந்தது. போராளிகள் மறைந்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. காட்டை வாழ்விடமாக்கிக் கொண்டதொரு வாழ்வு மீண்டும் வந்தது.

சுதன் ஒரு போராளியாகவே வாழ்ந்தான். இரவு நேரங்களில் காடுகளிற்குள் மறைந்தான். பகற்பொழுதுகள் போராளிகளுக்கு உணவழிப்பதிலும், வழிகாட்டுவதிலுமே கழிந்தது. மகேஸ்வரி சில நேரங்களில் வாயைத் திறப்பாள்.

" தம்பி, நீ செய்யிறதைச் செய்யப்பன், ஆனால் கொஞ்சம் கவனமாக, அவதானமாகத் திரியடா, உனக்கு ஏதுமெண்டால் என்னால வாழ ஏலாது " சுதனுக்கு அவ்வார்த்தைகள் நெஞ்சை உறுத்தும்.

"போராட்டம் இந்த மண்ணின்ர தேவை அம்மா. இந்த நேரத்தில என்னாலை வீட்டிலை சும்மா இருக்க முடியாது மற்றவை சொல்லுறமாதிரி கொழும்புக்கும் ஓடமுடியாது. இஞ்சை நீங்களெல்லாம் சாகேக்கை, கஸ்டப்படேக்கை வேற இடத்தில் சுகமா, சந்தோசமா இருக்க என்னால ஏலாது." அவனது வார்த்தைகள் சூடாக இருக்கும் ஆனால் சிறிது நேரத்தில் அமைதி அடைவான், குரல் தளதளக்கும். " நான் உங்களுக்காகத்தான் வீட்டில நிக்கிறன். அதுவும் நிம்மதியில்லாமல், அமைதியில்லாமல் இருக்கிறன் " என்பான் சுதன்.

சில நாட்களின் பின், சுதனுடன் நல்லவன் மாதிரிப் பழகியவன் ஒருவன் சுதனை ஏதோ வேலையென்று காட்டு வழியால் கூட்டிச்சென்றான். அத்தத் துரோகி கொடுத்த தகவலின்படி அங்கே தேச விரோதிகளும், இந்தியப் படைகளும் ஏற்கனவே மறைந்திருந்தார்கள். அந்த மனித மிருகங்களின் கைகளில் சுதன் ஒப்படைக்கப்பட்டான். அந்தக் கொடியவர்கள் அவனைக் கொடுமையாகச் சித்திரவதை செய்தார்கள். இறுதியில் அவனைக் கோரமாகக் கொலை செய்து காட்டு வழியில் வீசிவிட்டுச் சென்றனர்.

மூன்று நாட்களாகச் சுதனைக் காணாது தவித்தாள் மகேஸ்வரி. காட்டிற்குள் தன்மகன் கொல்லப் பட்டுக் கிடக்கிறான் என அறிந்து ஓடினாள். அவனது அழுகிப்போன உடலை, அழுகற்றுப்போன முகத்தைக் கட்டியணைத்து அழுதாள் ஆற்ற முடியாதளவிற்கு அழுதாள். மகேஸ்வரியால், இந்தத் துயரிலிருந்து மீளமுடியாது என்பது எல்லோருக்குமே தெரியும், நாட்கள் சென்றன. அவள் கண்ணீருடனேயே இருந்தாள்.

சிறுகதை

"எனி என்ன செய்யிறது, மதனையாவது இயக்கத்தில இருந்து, கூப்பிட்டு வீட்டில வைச்சிரு " என்றாள் ஒருத்தி.

" அவன் என்ர மகன்தான், ஆனாலும் இந்த மண்ணின்ர மகனும், இந்த தேசத்தின்ர விடுதலைக்காக, இந்த நாட்டைச் சீரழிக்கிறவங்களுக்கெதிராக, அவன் போராடத்தான் வேணும் ". மகேஸ்வரி உறுதியாகவே சொன்னாள்.

O O O

இந்தியப்படை வெளியேறி இந்த மண்ணுக்கு ஒரு நிம்மதியான வாழ்வு ஏற்பட்டிருந்தது. மகேஸ்வரி இப்போது கொஞ்சம் மாறிவிட்டாள். தன் கடைசிப்பிள்ளை சுதனாவின் சிரிப்பில், அவளது குறும்புத் தனத்தில் மனதைப் பறிகொடுத்து இருந்தாள். சில வேளைகளில் சிரித்தாள். போராளிகள் வீட்டுக்கு வந்து சென்றனர். திடீரெனத், தனக்கு அதிகமான பிள்ளைகள் இருப்பது போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டிருந்தது.

தன் மகனைப் பற்றி, அவனது தோழர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வாள். அவனது செயல்களைக் கேட்டு மகிழ்ந்து போவாள். பெருமைப்படுவாள்.

" அவன் தான் வீட்டை வாறேல்லை. நீங்களாவது அடிக்கடி வாங்கோ தம்பியவை " என்பாள்.

மீண்டும் சிறிலங்காப் படைகளுடனான யுத்தம் ஆரம்பித்தது. அப்போதுதான் ஒருநாள், ஒரு கடிதத்தை வைத்துவிட்டு சுதனா இயக்கத்திற்கு சென்று விட்டாள்.

" அம்மா யோசித்துப் பாருங்கள். போராட்டத்தில நீங்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கலாம். என்றாலும் இந்த மண்ணில பிறந்த எனக்கொரு கடமை இருக்குதெல்லேம்மா. நான் போராடச் செல்கிறேன். நிச்சயமாக, உயிருடன், வெற்றியுடன் உங்களுக்கு முன்னால் வருவேனம்மா"..

நெஞ்சு வலித்தது. மகேஸ்வரி மனதைத் திடப்படுத்திக் கொண்டாள். "பெடியளாராவது வருவாங்கள். சமைக்க வேணும்" மனம் பரபரத்தது. ஆனாலும் கண்கள் கண்ணீரைச் சிந்தியது.

O O O

மாங்குளப் பக்கமாக ஒரே வெடிச் சத்தம் கேட்டது. "பெடியள் மாங்குளம் காம்ப் அடிக்கிறாங்களாம் இண்டைக்கிடையில பிடிச்சிடுவாங்களாம்" சந்திக்கு போயிட்டு வந்த அரசரட்ணம் சொல்லிவிட்டு இருந்தார்.

மகேஸ்வரியின் நெஞ்சு படபடத்தது. தன் பிள்ளைகள், தன்னிடம் வரும் பிள்ளைகள், இன்னும் முகந்தெரியாத பிள்ளைகளுக்காகவெல்லாம் அவளுடைய மனம் அழுதது.

அன்றிரவு, அவள் நினைத்தது போலவே நடந்தது, போராளிகள் சிலர் வந்தனர்.

சுதனா......,

அவர்கள் மகேஸ்வரியை அழைத்துச் சென்றார்கள். ஒரு வீட்டில் மங்கிய விளக்கொளியில் 27 உடல்கள் அடுக்கப்பட்டிருந்தது. மகேஸ்வரியால் நிமிர்ந்து நடக்க முடியவில்லை. அவளால் இயலாது,

"எல்லாம், என் பிள்ளைகள்தான் ", அவள் அழுதாள், எல்லாப் பிள்ளைகளுக்காகவும் அழுதாள். அவளது மனம் அமைதி அடையும் வரைக்கும் அழுது கொண்டே இருந்தாள்.

மகேஸ்வரியின் வீட்டில்.,

புலிகள், அவளைப் பார்த்துக்கொண்டு மௌனமாக இருந்தார்கள். அவர்களுக்கு முன் அவள் அழக்கூடாது என நினைத்தாள். ஆனாலும் கண்களில் அடிக்கடி நீர் நிறைந்தது. சிந்திய கண்ணீரைத் துடைத்துக் கொண்டே,

"எனக்கும் உணர்வு, இருக்கு. கோபமும் வன்மமும் இருக்கு. என்ரை மனசும் அமைதி அடைய வேண்டும், நீங்கள் அடிக்கடி வாங்கோ தம்பியவை, நான் சமைச்சுப் போடுறன். என்னால இயன்றது எல்லாம் செய்யிறன், நீங்கள்திரும்பத்திரும்பவாங்கோ. நான் சாகும் வரைக்கும் சமைச்சுப் போடவேண்டும்." அவள் ஆவேசமாகச் சொல்லிக்கொண்டு இருந்தாள்.

ஒரு மூலையில் தன் தாயை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த மதனின் கைகள், அவன் அணைத்திருந்த ஏ. கே. 47 துப்பாக்கியை இறுக அழுத்தியது.

" எனி நான் சாகலாம் அம்மா இழப்புக்களைத் தாங்கப் பழகி விட்டா. இந்த மண்ணின் நிகழ்வுகளை ஒவ்வொரு தாயும் ஏற்றுக்கொள்ளுவதுபோல, என்ர அம்மாவும் ஏற்றுக்கொள்ளப் பழகி விட்டா" அவன் அமைதியாகச் சொல்லிக்கொண்டான்.

O O O

★ இந்த மண்ணின் ஓர் உண்மை நிகழ்வு ★

www.eelamview.com

# கண்ணீர் மல்கிய நிலையில் சிங்கள அன்னையர்கள்

சிறீலங்காவில் இதுவரை 60,000 சிங்கள இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது? எனக் கேட்டு காணாமல் போனோரின் தாய்மாரும், மனைவியரும் அணிதிரண்டு — அன்னையர் முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி — வீதியில் இறங்கி சிறீலங்கா அரசிடம் நியாயம் கோரிப் போராடுகின்றனர்.

கண்ணீர்மல்கிய நிலையில் 19-02-1991 அன்று கொழும்பில் கூடிய இந்த அன்னையர்கள் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளனர்.

காணாமல் போனோரில் 40,000 பேர்களது பட்டியல் தங்களிடம் உண்டென்று கூறும் இந்த அன்னையர்கள் மேலும் 20,000 பேர்களது பட்டியலைச்சேகரித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

- ★ காணாமல்போன தங்களது பிள்ளைகள் எங்கே வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறவேண்டும், அல்லது
- ★ இறந்துவிட்டார்களாயின் அதன் விபரங்களைத் தரவேண்டும் என சிறீலங்கா அரசிற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுவரைகாலமும் உலக சமூகத்தின்முன் அரைகுறையாக மறைக்கப்பட்டுக்கிடந்த சிறீலங்கா அரசின் உண்மைச் சொரூபம் அம்பலமாகத் தொடங்கியுள்ளது.

இதனால், இந்த அன்னையர்களது எழுச்சியைத் தடுக்க பிரேமதாசாவின் அரசு தன்னால் ஆன முயற்சிகளை மேற்கொள்கின்றது. அதேசமயம் இந்த அன்னையர்களது போராட்டத்தைக் கொச்சைப் படுத்துவதற்காகப் பதில் போராட்டங்களையும் நடாத்துகின்றது.

1987ம் ஆண்டு ஆடிமாதம் 29ம் திகதி இலங்கை — இந்திய ஒப்பந்தம் என்ற பெயரில் தமிழீழத்தில் இந்தியத்துருப்புக்கள் இறக்கப்பட்டன. ஆனால் ''இந்தியத்'' துருப்புக்களினால் சிறீலங்கா ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது என்ற உணர்வை ஜே.வி.பி சிங்கள மக்கள் மத்தியில் பரப்பியது. தமிழர்களுக்கு ஆதரவாகவும் சிங்கள மக்களுக்கு எதிராகவுமே இந்தியத் துருப்புக்கள் இங்கே கொண்டுவரப்பட்டன, என சிங்களவர்கள் பிழையாகச் சிந்தித்தனர். இதனால் ஆத்திரம்கொண்டு கலகங்களில் ஈடுபட்டனர்.

சிங்கள இனத்தைச்சேர்ந்த ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினரும், முதலாளித்துவ ஆட்சிமுறையில் வெறுப்புற்றிருந்த சிங்கள இளைஞர்களினதும் பிரதிநிதியாகத் தன்னைக் காட்டிக்கொண்ட ஜே.வி.பி இந்தியப்படைகளின் வருகையால் சிங்கள மக்களில் கணிசமானவர்களிடம் தோன்றியிருந்த மனக்கொதிப்பை தனக்குச் சார்பாக மாற்றிக் கொண்டது.

தன்னை ஒரு இந்திய எதிர்ப்புச் சக்தியாகப் பிரகடனப்படுத்திய ஜே.வி.பி அதைச் சிங்கள மக்கள் மத்தியிலும் பூதாகாரமாகக் காட்டியது.

இந்திய ஆக்கிரமிப்பை வெளியேற்ற தேசபக்தயுத்தத்தை நடாத்தப் போவது போல நாடகமாடியது.

உண்மையில், இந்திய ஆக்கிரமிப்புக்கெதிராக ஜே.வி.பி போராடவும் இல்லை, ஏதாவது ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவுமில்லை. மாறாக, அதனுடைய இலட்சியம் அராஜகப்பாதையில் சிறீலங்காவின் ஆட்சியைக் கைப்பற்றுவதாகவே இருந்தது. இதற்காக சிறீலங்காவில் கலகங்களை விளைவித்து. அரச உடமைகளுக்குத் தீயிட்டு, அரச ஊழியர்களை மிரட்டி, ஆட்சியைக்கைப் பற்றிவிட முடியுமெனமுட்டாள்தனமாக எண்ணி சிறீலங்கா அரசுக்கு நெருக்கடிகளைக் கொடுக்கத்தொடங்கியது.

ஆனால். இந்த எதிர்ப்புகளை ஒடுக்க சிறீலங்கா ஆட்சியாளர்கள் தங்களது படைபலத்தைப் பூரணமாகப் பயன்படுத்தினார்கள். அத்துடன், அரசின் உயர்பீடத்திலிருந்த அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களது கட்டளைகளின்கீழ் தனித்தனியான கொலைப்பட்டாளங்களை உருவாக்கி சிங்கள இளைஞர்களை வேட்டையாடத் தொடங்கினார்கள்.

தங்களுக்குப் பிடிக்காதவர்களையும், தங்களது அரசியல் எதிரிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும், முதலாளித்துவ ஆட்சிமுறைக்கு — எதிர்காலத்தில் — சவாலாக இருப்பார்கள் என்று கருதப்பட்டவர்களையும் கொன்று குவித்தார்கள். இவ்விதம் கொல்லப்பட்டவர்களையும் ஜே வி.பியினர் என்றே காட்டினர். ஆனால் இவர்களில் மிகப் பெரும்பாலானோர் அப்பாவிகளாகவே இருந்தனர்.

இந்தக் காலகட்டத்திலேயே தான் எதிர்பாராதவிதமாக ஜே. வி. பியின் தலைமையும் அழிக்கப்பட்டு அவர்களது செயற்பாடும் முடக்கப் பட்டுவிட்டது. ''ஜே. வி. பி பயங்கரவாதிகள் ஒடுக்கப் பட்டுவிட்டனர்'' என்று சிறிலங்கா அரசும் பிரகடனம் செய்ததுடன் கொல்லப்பட்ட அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் அனைவரும் ஜே.வி.பியினர் என்று முத்திரையும் குத்தப்பட்டது. இவ்விதமாகத்தான் அந்த அப்பாவிச் சிங்கள இளைஞர்களின் படுகொலையை சிறீலங்கா அரசு உலகிற்கு நியாயப்படுத்தியது.

இதேபோன்றுதான் 1971ம் ஆண்டு 10,000 ற்கும் மேற்பட்ட அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டிருந்தனர்.

அதேசமயம், கடந்த 40 வருடகாலமாக மாறி மாறி வந்த சிறீலங்கா ஆட்சியாளர்கள் ஒரு பாரிய இனப்படுகொலையை தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு நடாத்திக்கொண்டு வருகின்றார்கள். தமிழர்களின் மொழி, நிலம், கலாச்சாரம், பொருளாதாரம் என்பன அரச இயந்திரங்கள் மூலம் திட்டமிட்டுச் சிதைக்கப்படுகின்றன. இதுவரை பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர்.

இன்றும் காட்டுமிராண்டித்தனமான வழிமுறைகள் மூலம் தென்தமிழீழ மக்கள் இனப்படுகொலை செய்யப் படுகின்றனர்.

தமிழ்மக்களின் இந்த அவலத்தை சிறீலங்கா அன்னையர்முன்னணி கருத்தில் எடுத்து தனதுகோரிக்கைகளில் இதையும் சேர்த்துக்கொள்ள மறந்துவிட்டது.

அதேசமயம், தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையை நாங்கள் சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்தும் அதேவேளை சிங்கள ஆட்சியாளர்களாலேயே பெருந்தொகையான சிங்கள மக்களும் கொன்று குவிக்கப் பட்ட செய்திகளையும் உலகிற்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

எங்களது அறிக்கைகள் வாயிலாகவும், எங்களைச் சந்திக்க வரும் வெளிநாட்டுச் செய்தியாளர்களிடமும் இந்தச் செய்திகளை சொல்லியே வந்திருக்கின்றோம்.

சிறிலங்கா அன்னையர் முன்னணிக்கு நாங்கள் சொல்ல விரும்புவது இது தான்.

இன்று நீங்கள் உள்ள மனநிலையில் இருந்து பார்த்தால் எங்களது மக்களுக்கெதிரான அடக்குமுறையின் கொடூரத்தை உங்களால் உணர்ந்துகொள்ளமுடியும்.

சிங்கள அரசியல்வாதிகளினாலும், பிற்போக்குச் சிந்தனையாளர்களினாலும் தமிழர்களுக்கு எதிராகத் தூண்டப்படும் இனவெறியிலிருந்து நீங்கள் விடுபட்டு உண்மை நிலை பற்றிச் சிந்திக்கவேண்டும்.

சிங்கள இனத்தைச்சேர்ந்த உங்களது பிள்ளைகளையே இரக்கமின்றிக் கொன்றொழித்த சிறிலங்கா அரசும், அதனது படைகளும் தமிழ் இளைஞர்களையும் — யுவதிகளையும் எவ்விதம் கொடூரமாகக் கொன்று புதைத்திருக்கும் என்று சிறிது சிந்தித்துப்பாருங்கள்,

இந்த 60,000 சிங்கள அன்னையர்களினதும், பல்லாயிரக்கணக்கான தமிழ் அன்னையர்களதும் வேதனைக்கும் — கண்ணீருக்கும் காரணம் சிறிலங்கா முதலாளித்துவ ஆட்சியாளர்கள்தான்.

ஆனால், வேடிக்கை என்னவென்றால அப்பாவிமக்களை அநாவசியமாகக் கொன்று குவித்த சில கட்சிகள் இன்று இந்த அன்னையர்களது துயரில் பங்கு கொள்வது போலப் பாசாங்கு செய்வது தான்.

இந்த அன்னையர்களது வேதனை நிறைந்த கண்ணீரில் இவர்கள் தங்களது குப்பாடித்தனமான அரசியலை நடாத்த முனைகின்றார்கள்.

கொடுமைகள் இழைக்கப் பட்டுக் கொன்று குவிக்கப் படும் ஒரு மக்கள் கூட்டத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் தங்களது அன்புக்குரியவர்களை இழந்த இந்த சிங்கள அன்னையர்களது வேதனைகளை நாங்கள் புரிந்து கொள்கின்றோம்.

அவர்களது போராட்டத்திற்கு மதிப்பளிக்கின்றோம்.

அதேசமயம், அடக்கப்பட்ட ஒரு தேசியஇனத்தின் விடுதலைக்காகப் போராடும் ஒரு அமைப்பு என்றரீதியில் இந்த அன்னையர்களது போராட்டத்திற்கு புலிகளின் ஆதரவும் உண்டு என்பதையும் பிரகடனப்படுத்துகின்றோம்.

## தமிழீழ பெண்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது சமூக அமைப்பில், நீண்ட நெடுங்காலமாக பெண்ணினம் ஒடுக்கப்பட்டுவருகிறது. எமது வேதாந்தங்களும், மத சித்தாந்தங்களும், மனுநீதி சாஸ்திரங்களும் அந்தக் காலந்தொட்டே பெண் அடிமைத்தனத்தை நியாயப் படுத்திவந்திருக்கின்றன. ஆணாதிக்கம், சாதியம், சீதனம் என்று பல்வேறு பரிமாணங்களில் இந்த ஒடுக்குமுறையானது பெண்களின் வாழ்க்கையை ஊடுருவி நிற்கிறது. அவர்களது வாழ்க்கையை சிதைத்து வருகிறது.

எமது சமூகத்தின் சனத்தொகையில் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்துவந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசியப் போராட்டமாக முன்னெடுப்பது கடினம். இதனை உணர்ந்துதான் எமது இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப்படுத்தியது. பெண்களை அரசியல் மயப்படுத்தி, போராட்டத்திற்கு அவர்களை அணி திரட்டியது. இவ்வகையில் நாம் தமிழீழ பெண் சமூக மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியிருக்கிறோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கிறது.

காலம் காலமாக அடுக்களையில் அடங்கிப்போயிருந்த தமிழீழப் பெண்ணினம் இன்று ஆயுதம் ஏந்தி நிற்கிறது. சீருடை தரித்து நிற்கிறது. எதிரியை களத்தில் சந்திக்க நிற்கிறது.

காலம் காலமாக தூங்கிக் கிடந்த பெண்ணினம் இன்று விழிப்படைந்து, எமது போராட்டத்தின் ஒரு புரட்சிகர சக்தியாக எழுச்சிகொண்டு நிற்கிறது.

வீரத்திலும் தியாகத்திலும் விடுதலையுணர்விலும் ஆண்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் இல்லை என்பதை எமது பெண்போராளிகள் தமது வீரசாதனைகள்மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

ஒரு புதுமைப் பெண்ணை, ஒரு புரட்சிகரப் பெண்ணை எமது விடுதலை இயக்கம் படைத்திருக்கிறது.

தமிழீழத்தில் இந்தப் பெண் புரட்சி தொடரவேண்டும். மேலும் மேலும் புரட்சிப் பெண்கள் எமது விடுதலை இயக்கத்தின் பின்னால் அணி திரளவேண்டும். போராட்டம் மூலமாகவே நாம் தேச விடுதலையையும், பெண் விடுதலையையும் வென்றெடுக்க முடியும்.

நாம் ஒரு சாதாரண சூழலில் ஒரு சாதாரண வாழ்க்கையை வாழவில்லை. நாம் ஒரு போராட்ட சூழலில் வாழ்கிறோம். போராடினால் தான் எமக்கு வாழ்வுண்டு, விடிவுண்டு, வருங்காலமுண்டு என்ற ஒரு நெருக்கடியான நிர்ப்பந்தத்திற்குள் வாழ்கிறோம். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் போராட்டமே எமது வாழ்க்கையாகவும், வாழ்க்கையே எமது போராட்டமாகவும் மாறிவிட்டது. இந்த எதார்த்தமான வரலாற்று நிர்ப்பந்தத்திலிருந்து யாருமே தப்பிக் கொள்ள முடியாது. அப்படித் தப்பிக்கொள்ள முனைபவர்கள் தேசாபிமானம் கொண்டவர்கள் அல்லர்.

இன்றைய யுத்தத்தின் தீச்சுவாலைகள் எல்லோரையும் தீண்டிவருகிறது. ஆண்,பெண் என்ற வேறுபாடின்றி, சாதிய வர்க்க வேறுபாடின்றி, சிறியோர், முதியோர் என்ற வேறுபாடின்றி எல்லோரையும் தீண்டிவருகிறது. இது எமது இனத்திற்கு எதிராக, எமது இனத்தை அழிக்கும் நோக்கத்துடன் நடாத்தப்படும் யுத்தம். இந்த யுத்தத்தை நாம் அசட்டைசெய்ய முடியாது. இந்த யுத்தத்திலிருந்து நாம் ஒதுங்கிக்கொள்ளவும் முடியாது. இந்த யுத்தத்தை நாம் துணிவுடன் எதிர்கொள்வதைத்தவிர எமக்கு வேறு வழி இல்லை.

நாம் ஒன்றுபட்ட மக்களாக, ஒரே தேசிய சக்தியாக அணிதிரண்டு எமது எதிரியின் சவாலை எதிர் கொள்ள வேண்டும். மலைபோல உறுதியுடன் நாம் ஒன்று குவிந்து நின்றால் எம்மை எத்தகைய சக்தியாலும் அழித்துவிட முடியாது.

இந்த தேசிய ஒற்றுமையையும் இன ஒருமைப்பாட்டையும் ஒரு வலுவான அத்திவாரத்தில் கட்டி எழுப்புவதென்றால் எம் மத்தியில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். சமூக முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டும். சமூக அநீதிகள் அழிக்கப்பட வேண்டும் ஆண் பெண் என்ற பாலியல் அடிப்படையில் தோற்றம் கொண்ட பாரபட்சங்கள் அகற்றப்பட வேண்டும்.

அனைத்து தமிழ் மக்களும். ஒரே இனம் என்ற தேசாபிமான உணர்வுடன் போராட்டத்தில் பங்குகொண்டால் எமது விடுதலை இலட்சியம் வெற்றிபெறுவது நிச்சயம்.

சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே எமது போராட்ட இலட்சியம் பெண்கள் சம உரிமைபெற்று, சகல அடக்குமுறைகளிலிருந்தும் விடுதலைபெற்று, ஆண்களுடன் சமத்துவமாக கௌரவமாக வாழக்கூடிய புரட்சிகரமான சமுதாயமாக தமிழீழம் அமையவேண்டும் என்பதே எனது ஆவல்.

பெண்களின் எழுச்சித் தினமாகிய இன்று உலகப் பெண்ணினத்தின் உரிமைப் போராட்டங்களுக்கு எனது ஆதரவையும், ஆசியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

www.eelamview.com

# வவுனியா சிறை

***01 - 05 - 1989 அன்று வவுனியாவில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப் படையின் சிறையை உடைத்து, [illegible] கைதிகள் தப்பியோடி இருந்தார்கள்.***

***வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சிறை உடைப்பை கைதிகளாக இருந்த புலிவீரர்கள் செய்து முடித்திருந்தார்கள்.***

***ஆயுதபாணிகளாக, சிறைக்காவல் புரிந்துகொண்டிருந்த இந்திய ஜவான்களை கத்தி, கோடரி, விறகுதடிகள் கொண்டு தாக்கி மடக்கி இந்தச் சிறைஉடைப்பை வெற்றிகரமாக நடாத்தி இருந்தார்கள்.***

***இந்த முயற்சியில் இரண்டு புலிவீரர்கள் உட்பட நான்குபேர் தங்களது உயிர்களை அர்ப்பணித்திருந்தார்கள்.***

***இத்துணிகரமான சம்பவத்தைத் தமிழீழ மக்களுடன் பகிர்ந்துகொள்கின்றோம்.***

**நாங்கள், உங்களது கைதிகளில்லை,**

**நீங்கள், எங்களைப் போர் முனையில் பிடிக்கவுமில்லை,**

**எனவே எங்களை உடனடியாகவே எமது மண்ணிலே கொண்டுசென்று விட்டுவிடுங்கள்,**

**இல்லையேல், இந்திய நீதி மன்றங்களிடம் ஒபபடையுங்கள்.**

போர் முனையிலே காயமடைந்து சிகிச்சைக்காக தமிழ்நாடு சென்றிருந்த நாற்றிற்கும் மேற்பட்ட எமது போராளிகள் தமிழ் நாட்டு மண்ணிலேயே கைதிகளாக்கப்பட்டார்கள். அந்த அநாகரீகமான கைதிகளை இந்திய மக்களுக்கும், உலகிற்கும் எடுத்துக்காட்டுவதற்காக சென்னை சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணா நோன்பு இருக்கப்போவதாக எமது மூத்த தளபதிகளில் ஒருவரான திரு. கிட்டு பகிரங்கமாக அறிவித்தார்.

இந்த சாத்வீகப் போராட்டத்தை முறியடிப்பதற்காக தமிழ்நாட்டில் கைதிகளாக இருந்த அனைத்துப் புலி வீரர்களையும் தமிழீழம் கொண்டு வந்தார்கள்.

திரு. கிட்டு உட்பட முழுமையாக ஊனமடைந்த ஒரு சிலரை விடுதலை செய்துவிட்டு, மிகுதிப் போராளிகளை இந்தியப்படை முகாம்களிலேயே தொடர்ந்தும் சிறை வைத்தார்கள்.

அவ்விதமாக இருந்த சிறைச்சாலைகளில் ஒன்று தான் வவுனியா தடுப்பு முகாம்.

வவுனியா நகரின் புகையிரத நிலையத்திற்கும், பண்ணை இராணுவ முகாமிற்கும் மத்தியில் சில அரச கட்டடங்களைச் சுவீகரித்து தமிழர்களை அடைக்கும் தடுப்பு முகாம்களாக இந்தியப்படையினர் மாற்றினார்கள்.

இங்கே மொத்தம் 89 பேர் கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில்

* 5 பெண்களும்
* 22 புளொட் "விருந்தினர்களும்"
* எமது ஆண்போராளிகள் 33 பேரும் - இவர்களில் பெரும்பாலானோர் இந்தியாவில் கைதானவர்கள் -
* எமது உதவியாளர்கள் உட்பட சாதாரண மக்கள் 29 பேரும் இருந்தனர்.

### கைதிகள் பராமரிப்பு முறை

இந்த 89 கைதிகளும் 6 வீடுகளில் வைக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு நாளும் காலை, மதியம், மாலை என மூன்று தடவைகள் கைதிகள் வரிசையாக நிற்க வைக்கப்பட்டு எண்ணிக் கணக்குச் சரிபார்க்கப்படுவார்கள்.

தினமும் காலை 6.00 மணிக்கு காலைக்கடன் முடிப்பதற்காக 20 நிமிடங்கள் வழங்கப்படும்.

காலை உணவு 8.00 மணிக்கும், மதிய உணவு 12.00 மணிக்கும், இரவு உணவு மாலை 6-00 மணிக்கும் வழங்கப்படும்.

மாலை 6.00 மணியுடன் விடுதிகள் அனைத்தும் பூட்டப்பட்டு விடும் இரவில் வெளிச்சம் இருக்காது.

தினமும் காலை 9.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரையும் கைதிகளுக்கு வேலை கொடுக்கப்படும்.

குப்பை கூழங்களை அகற்றுதல், செடிகொடிகளை வெட்டுதல், இராணுவத்திற்குப் பதுங்கு குழிகளை வெட்டிக்கொடுத்தல், விறகு கொத்துதல், சமையல் பாத்திரங்களைக் கழுவிக் கொடுத்தல் போன்றவை இவ்வேலைகளுள் அடங்கும்.

வாரத்தில் ஒரு நாள்-சனிக்கிழமைகளில் கைதிகளைப் பார்ப்பதற்கு உறவினர்கள் அனுமதிக்கபபடுவார்கள். அவர்கள் கொண்டுவரும். பொருட்கள் அவர்களின், கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் 5 நிமிடங்கள் கதைப்பதற்கு அனுமதிக்கப்படும். அந்த நேரத்திலும் இந்தியப்படையின் புலனாய்வுததுறை அதிகாரி ஒருவன் கூடவே இருந்து என்ன கதைக்கப்படுகின்றது. என்பதைக் கண்காணிப்பான்.

பெண் கைதிகள் ஒரு தனிப்பிரிவாக ஒரு வீட்டில் வைக்கப்பட்டிருந்தார்கள். இவர்களில் 4 பேர் எமது போராளிகள். அவர்களில் ஒருவர் சண்டை ஒன்றில் ஒரு கண்ணை இழந்திருந்தார். இந்தநால் வரும் தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்டவர்கள்.

இவர்களையும் ஆண் பொலிசாரே காவல் காத்தனர். ஆனால், பெண் கைதிகளுடன் கதைப்பதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை.

விசாரணையின் போது மட்டும் பெண் கைதிகளின் விடுதிகளுக்கு புலனாய்வுத் துறையினர் சென்றுவருவர்.

### கைதிகளின் வகை

இங்கே கைதிகளாக வைக்கப்பட்டிருந்தவர்களை 4 வகைக்குள் அடக்கலாம்.

1. புலி வீரர்கள்
2. போராட்டத்திற்கு உதவிய தேசபக்தர்கள்
3. சந்தர்ப்ப வசத்தால் கைதிகளான சாதாரண குடிமக்கள்.
4. புளொட் இயக்கத்தினர்.

இவர்களில் புளொட் ஆட்கள் கைதிகளைப்போல் அங்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. அவர்கள் கௌரவமான ஒரு விருந்தினர்களாகவே வைக்கப்பட்டிருந்தனர். சிறைகளுக்குள்ளே இந்தியப்படையின் ஒற்றர்களாகவும், ஐந்தாம் படையாகவுமே செயற்பட்டார்கள்.

உறவினர்களைச் சந்தித்துவிட்டு வரும் கைதிகள் விடுதிக்குள் வந்து என்ன கதைக்கின்றார்கள்? தப்பி ஓடத் திட்டமிடுகின்றார்களா? என்பதைக் கண்டறிந்து இந்தியப் படையினருக்குத் தெரிவிப்பது தான் புளொட்டினது முக்கிய பணியாக இருந்தது.

### தப்பி ஓடத் திட்டம் தீட்டப்படுகின்றது.

இந்திய மண்ணிலிருந்து கொண்டு வந்து எமது மண்ணில் சிறைவைக்கப்பட்டது எமது போராளிகளுக்கு ஒரு தெம்பை ஊட்டியது. தப்பி ஓடும் எண்ணத்தைத் தீவிரப் படுத்தியது.


தடுப்பு முகாமின் வேலி தாண்டப்பட்டு சில மைல்கள் தூரம் சென்று விட்டால் சுதந்திரப்பறவைகள் ஆகி விடலாம் என நினைத்தார்கள். அத்துடன் வவுனியாப்பகுதியில் கைது செய்யப்பட்ட சில போராளிகளும் அங்கிருந்தனர். இதனால், வவுனியா சிறையின் அமைவிடமும், தப்பிப்போவதற்குரிய வழிமுறைகளையும் சரியாகக் கண்டு பிடிப்பதில் சிக்கல்கள் இருக்கவில்லை. அத்துடன் காவலர்கள் வைத்திருந்த தொடர் சூட்டை வழங்க முடியாத ஆயுதங்களும், காவல் காக்கப்பட்ட முறைகளும் தப்பிச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையை கைதிகளுக்கு மேலும் வளர்த்தது.


முதலில் ஒரு சில போராளிகளே சிறை உடைப்புத் திட்டத்தினை வரையத் தொடங்கினார்கள். எல்லாம் முடிவு செய்யப்பட்டு, முன்னேற்பாடுகளையும் செய்த பின்னர் சக போராளிகளுக்குத் தெரியப்படுத்துவதென்றும், மற்றையோருக்கு இறுதி நிமிட நேரத்தில் மட்டும் தான் தெரியப்படுத்துவது என்றும் தீர்மானித்தார்கள்.

இது இரகசியம் பேணும் தன்மைக்காகவும், நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகவும் அவர்கள் செய்த தந்திரோபாயம்.

முதலில் அந்தத் தடுப்பு முகாம் எப்படிக் காவல் காக்கப்படுகின்றது. அவற்றின் நெளிவு - சுழிவுகள் என்ன என்பதைக் கண்டறியத் தீர்மானித்தார்கள்.

அன்றிலிருந்து திட்டம் தீட்டிய அந்தப்போராளிகளுக்கு பகல் நேரவேலை என்பது ஆர்வத்துக்குரிய தொன்றாகி விட்டது.




www.eelamview.com

# உடைப்பு

இதைத் திட்டமிட்ட போராளிகளுள் ஒருவர் அந்த சூழ் நிலையை இப்படி நினைவு கூருகின்றார்...

"அப்போதெல்லாம் (தப்பி ஓடும் முடிவு எடுக்கப்பட்ட பின்னர்) எனது மனம் பரபரப்பாகவே இருந்தது. நித்திரை குறைந்தது. என்றுமில்லாதவாறு ஒவ்வொருவரையும் அவதானிக்கத் தொடங்கினேன். அனைத்துப்பொருட்களும், அனைத்து ஆட்களும் என்னைப் பொறுத்தளவில் ஆராய்ச்சிக்குரியனவாகவே மாறிவிட்டன.

ஒவ்வொரு காவலனும் என்ன செய்கிறான்? எங்கே போகிறான்? அவனது உடற்பலம் என்ன? அவர்களது ஆயுதங்களின் சுடுதிறன் எத்தகையது?... போன்ற கேள்விகளுக்கு திரும்பத்திரும்ப விடை தேடமுயன்றேன்" இவ்விதமாக அவர் தனது மன உணர்வுகளை நினைவு கூர்ந்தார்.

இந்தக் கால கட்டத்தில் தான் சிறைக்காவலில் தொடராக சில மாற்றம் நிகழ்கின்றது.

முதலில் இங்கிருந்த இராணுவட்படைஅணி மெட்ராஸ் றெஜிமென்டைச் சேர்ந்தது. பின்னர் அது மாற்றமடைந்தது. பஞ்சாப், கூர்க்கா, மகாராஸ்ட்டா போன்ற படை அணிகள் மாறி மாறி வந்து போய்க்கொண்டிருந்தன.

மெட்ராஸ் றெஜிமெண்டில் இருப்பவர்கள் பலர் தென்னிந்தியர்கள். இவர்களுக்குத் தமிழ் தெரியும். சிலர் தமிழர்களாகவே இருந்தனர். இதனால் கைதிகளுடன் கதைத்துப்பேச வாய்ப்புகள் இருந்தன. அதன்மூலம் கைதிகளின் மனோநிலைகளையும், அவர்களின் எண்ணங்களையும் உடனுக்குடன் சில புல்லுருவிகள்மூலம் இராணுவத்தினர் அறிந்துவிடுவார்கள். அது எமக்குப் பாதகமாகத்தான் இருந்தது. இதனால் தமிழ்தெரியாத மற்றைய படை அணியினரின் வருகை எமது முயற்சிக்கு சாதகமானதாகவே இருந்தது.

சி. ஆர். பி எனப்படும் மத்திய றிசேவ்படையினர் சிறை நிருவாகத்தை பொறுப்பேற்கும்வரை இராணுவத்தினரே சிறை நிருவாகத்தை நடாத்தி வந்தனர். சி. ஆர். பியினர் வந்தவுடன் இருபடைஅணிகளும் சேர்ந்து சிறைக்காவலை பங்குபோட்டன.

சிறையின் புறக்காவலை இராணுவத்தினர் காவல் காக்க, கைதிகளை நேரடியாகக் கண்காணிக்கும் சிறையின் உட்பகுதியின் காவலை சி. ஆர். பி யினர் எடுத்துக்கொண்டனர்.

இந்தப் படையணி மாற்றத்தைப்பற்றி ஒரு கைதி தனது கருத்தைச் சொன்னார்.

இந்த மாற்றம் எமது தப்பி ஓடும் திட்டத்துக்கு பெரிய உதவியைப் புரிந்திருக்கின்றது.

இராணுவம் — எந்தப் படைஅணியைச் சேர்ந்தாலும் — அவர்களை விட தாங்கள் அறிவாளிகள், சாதியில் உயர்ந்தவர்கள் என்ற கருத்து சி. ஆர். பியினரிடம் இருந்தது. இதைப் பகிரங்கமாகவே கைதிகளுக்குச் சொல்லி பெருமையடைவார்கள். இதனால் இரண்டு படையணியினருக்கும் முரண்பாடுகள் எழத்தொடங்கிவிட்டன. நாட் செல்லச்செல்ல இரண்டு படையணியினதும் மனக்குமுறல்களை இறக்கிவைக்கும் சுமைதாங்கியாக கைதிகள் மாறத்தொடங்கினார்கள்.

ஒரு படையணி மற்றையதைப் பற்றி இகழ்வாகப் பேசியது. மற்றைய படையணி அதைப்பற்றி எண்ணி நகையாடியது.

ஏதாவது ஒரு படையணி ஏதோ ஒரு காரணத்திற்காக எம்மைத் தண்டிக்க முயலும்போது மற்றைய படையணி அதற்கு ஒத்துழைக்காது விடுவதுடன் சில வேளைகளில் அதற்கு எதிர்ப்பும் தெரிவிக்கத் தொடங்கியது.

கதவு பூட்டப்பட்டிருக்கும்போது விடுதிக்கு அருகில் நின்று காவல்புரியும் சி.ஆர்.பியினருடன் கதைப்போம்.

கதவு திறந்து வெளியில் விடப்படும் நேரங்களிலும், வேலை நேரங்களிலும் இராணுவத்துடன் கதைப்போம்.

அந்த இரண்டு படையணிகளினதும் முரண்பாட்டுக்கு இடையே - அவதானமாக - நூலிழையில் ஒரு உறவை ஏற்படுத்த முயன்றோம்.

## புளொட்டின் நடவடிக்கைகள்

இந்தியப்படையின் தலைமைக் கூலிப்படை யார் என்பதை நிர்ணயிக்க ஈ.பி.ஆர் எல் எவ். இனருடன் புளொட நடாத்திய சண்டையைக் காரணம் காட்டித்தான் வவுனியா புளொட் அலுவலகத்தில் இருந்த சுமார் 22 பேரை இந்தியப் படை அழைத்துவந்து தனது முகாமில் வைத்திருந்தது. அவர்கள் கைதிகளாகக் கொண்டு வரப்படவில்லை. இடம் மாற்றப்பட்டார்கள் என்று தான் சொல்லலாம். முன்னர் இந்தியப் படை முகாமுக்கு அருகில் தமது அலுவலகத்தை அமைத்திருந்தார்கள். பின்னர் இந்தியப் படை முகாமுக்கு உள்ளே தமது அலுவலகத்தை அமைத்து வைத்திருந்தனர். அதுதான் வித்தியாசம். எனவே தமது முன்னைய "வேலையை" இங்கேயும் தொடர்ந்து செய்தார்கள். சிறைக்குள் நடப்பதை கதைப்பதை கடசுட இராணுவ உயர் அதிகாரிகளுக்கு அறிவித்துக் கொண்டே இருந்தார்கள்.

இருந்த போதிலும் சிறை உடைப்பைக் கச்சிதமாகச் செய்வதற்காக புளொட்டினருடன் முரண்படுவதை எமது போராளிகள் கணிசமான அளவு தவிர்த்தார்கள்.

## சிறையின் அமைப்பும் காவலும்

வவுனியா நகரின் மையத்திலே விசாலமான நிலப்பரப்பிலே வன்னிப்பகுதியின் பிரதான இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது. இதன் ஒரு புறத்தில் புகையிரத நிலையப் பக்கமாக-முக்கோண வடிவத்தில் மூன்று கட்டடங்களில் கைதிகள் வைக்கப்பட்டிருந்தனர். இதில் மூன்றாவது விடுதி இரண்டாக்கப்பட்டிருந்தது. அதில் ஒன்றில் புளொட் விருந்தினர்கள் தங்கவைக்கப்ட்டபடிருந்தனர்.

மூன்று கட்டடங்களுக்கும் நடுவே சமையலறை இருந்தது. தடுப்பு முகாமின் ஒரு பக்கம் புகையிரதப்பாதையை எல்லையாகக் கொண்டிருந்தது. அதில் ஒரு இயந்திரத்துப்பாக்கி பொருத்தப்பட்ட காவலரண் ஒன்றும் இருந்தது. வெளியிலிருந்து வரும் ஆபத்தைக் குறிபார்த்தபடி அது கிடந்தது.

இன்னொரு பகுதியின் ஒரு மூலையில் வவுனியா மாவட்ட இந்தியப் படைத் தலைமை அதிகாரியான பிரிகேடியர் ஒருவரது விடுதியும் இருந்தது. அங்கே எந்நேரமும் அதிக எண்ணிக்கையான இராணுவத்தினர் துப்பாக்கிகளுடன் காவலுக்கு நின்றனர்.

தடுப்பு முகாமை மட்டும் எடுத்துக் கொண்டால் அங்கே எந்நேரமும் துப்பாக்கி ஏந்திய காவலர்கள் மாறி மாறி ஒரே சமயத்தில் - காவல் புரிவார்கள். இவர்களில் ஒருவர் இயந்திரத் துப்பாக்கியை வைத்திருக்க மிகுதிப் 10 பேரும் எஸ். எல். ஆர் ரகத் துப்பாக்கிகளை வைத்திருப்பார்கள்.

சி. ஆர். பி யினர் தடுப்பு முகாம் நிர்வாகத்தைக் கையேற்க முன்னர் - இராணுவத்தின் நிர்வாகத்துக்குள் இருந்தபோது நிர்வாகம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக இருக்கும். இதை வெளியில் நடைபெறும் தாக்குதல் சம்பவங்களே நிர்மாணிக்கும்.

சிறையை காவல் காத்துக் கொண்டிருக்கும் படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் எங்காவது தாக்குதலுக்குட்படுத்தப்பட்டு பாரிய இழப்புகளைச் சந்தித்தால் அந்தப் படை அணியைச் சேர்ந்தவர்கள் கைதிகள் மீது வஞ்சம் தீர்ப்பார்கள்.

தாக்குதல்களில் குறிப்பிட்ட அந்த இராணுவ அணிக்குப் பாதிப்பு எத்தகையது என்பதை எமக்குத் தரப்படும் தண்டனைகளை வைத்து அளவீடு செய்வோம்.

தேனீர் நிறுத்தப்பட்டு சிறைச் சாளரங்கள் மூடிவிடப்பட்டு வெளியில் விடாமல் அடைக்கப்பட்டிருந்தால் இராணுவத்தினருக்குக் கணிசமான இழப்பு என்றும்,

மலசலம் கழிக்க விடாது தடுக்கப்பட்டால், மண் போட்டு உணவு தரப்பட்டால் அல்லது எமக்கென்று சமைத்த உணவை கொட்டினால் இராணுவம் பாரிய இழப்பைச் சந்தித்திருக்கின்றது என்றும் அர்த்தம் கொள்வோம்.

இந்த நாட்களில் சிறைச்சாலை அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கும்.

இதனால் ஆரம்பத்தில் சிறைச்சாலையில் ஒரு சுமூக சூழல் உருவாகவில்லை. நாங்கள் தப்பி ஓடுவதற்கு அவ்விதமான ஒரு சூழல் தேவை. அவ்விதமான ஒரு சூழலை எதிர்பார்த்துக் கிடந்தோம். சி.ஆர்.பி யினர் அங்கு வந்ததும் அந்தச் சூழ்நிலை மெதுவாக உருவாகிவிட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தேசபக்தன்



1984, ஆனந்நர் புளியங்குளத்திற்கு அருகில் உள்ள காட்டுக்குள் புலிகள் முகாம் அமைத்துக் கொண்டார்கள். அந்நேரத்தில்தான் கணேசலிங்கமும் புலிகளுக்கு அறிமுகமானான். அன்று தொடக்கம் அவர்களில் ஒருவனாகவே கணேசனும் வாழ்ந்தான். போராளிகளின் காட்டு வாழ்வில் உறுதியாகவே துணை நின்றான்.

கணேசன், இரவும் பகலும் புலிகளுடனேயே நின்றான். "இப்படி இருப்பதிலும் நீ இயக்கத்தில் சேர்ந்து விடலாம்" என போராளிகள் சிலர் சொல்வதுண்டு. அவனுக்கும், ஒரு போராளியாக வாழ்வது தான் விருப்பம். ஆனால் அவனது குடும்பம் வறுமையானது. ஏற்கனவே அண்ணன் ஒருவனும், தம்பியும் வீட்டை விட்டு வெளியேறி இருந்தனர். குடும்பத்தின் சுமையை அவன்தான் தாங்கவேண்டி இருந்தது. ஆனாலும் அவன் வீட்டில் நிற்பதே இல்லை.

ஊருக்குச் செல்வான், தோட்டத்தில் வேலைகளை விரைவாகச் செய்வான், சிறிது நேரத்தில் காட்டிற்குள் புலிகளின் முகாமில்... ஏதாவது வேலையுடன் நிற்பான்.

சில வருடங்கள் சென்றன.

இயக்கத்தின் அரசியற்பிரிவு வளர்ச்சியடைந்தது. நாடெங்கும் புலிகள் பரவினார்கள். அந்நேரத்தில் புலிகளின் அரசியல் வேலைகளை கணேசன் முன்னின்று செய்தான். ஒரு போராளிக்குரிய உயர்ந்த மனோபாவம் அவனுக்கு இருந்தது. எப்பவுமே ஏழை மக்களின் சார்பாகவே அவனிருந்தான். அந்த மக்களின் உணர்வுகளை, தேவைகளை விளங்கிக்கொண்டு செயற்பட்டான்.

இந்தியப்படை இங்கு வந்ததும், மிகக் கொடூரமாகவே நடந்துகொண்டது. இந்த மண்ணை நேசித்த மக்களும், புலிகளின் ஆதரவாளர்கள் பலரும் வீதிவீதியாகச் சுட்டுக்கொல்லப்பட்டார்கள், அந்த நிலையிலும் கணேசன் புலிகளிற்காகச் செயற்பட்டான்.

ஆனால், கரிய இரவொன்றில் இந்தியப் படைகள் அவனைக் கைது செய்தனர். கொடிய சித்திரவதைகள், அவனது மெலிந்த தேகத்திற்குள்ளிருந்த மனவுறுதி அச்சித்திரவதைகளைத் தாங்கிக்கொண்டது.

இந்தியச் சிறை.

எமது போராளிகள் பலர் இருந்தனர். அவர்களுடன் கணேசனும் இருந்தான் எதிரியின் சிறைக்குள்ளும் அவர்கள் நெஞ்சை நிமிர்த்தியே வாழ்ந்தார்கள். சிறை வாழ்க்கை, கணேசனை விடுதலையில் மேலும் பற்றுடைய மனிதனாக வளர்த்தது.

நமது தேசத்தில் ஒரு உன்னதமான விடுதலைப் போர் நடக்கையில், எதிரியின் சிறைக்குள் அர்த்தமற்று வாழ்வது..., அங்கு எவருக்குமே பிடிக்கவில்லை. அந்தக் கொடிய சிறைக்கதவுக்கு வெளியே அவர்கள் பறக்க விரும்பினர்.

திட்டமிடப்பட்டது.

முதலில் பெண் போராளிகளை விடுவிப்பதாக எண்ணமிருக்கவில்லை, ஏனெனில் அவ்விடயம் சிரமமானது, ஆபத்தானது. ஆனால் அவர்கள் கட்டாயமாக விடுவிக்கப்படவேண்டும் என்பதில் கணேசன் உறுதியாக இருந்தான். அச்செயலை தானும் சென்று செய்வதாகக் கூறினான்:

அவர்கள் தப்பிச்செல்லும் நாள். எல்லாம் திட்டமிட்டபடி நடந்தது. அதன்படி பெண்கள் விடுதிக்கு அருகில் இருந்த காவலாளனைக் கைப்பற்ற இவர்கள் மூவர் சென்றனர். விறகுகளும், கம்பிகளும் ஆயுதங்களாயின.

கணேசனின் கைகளில் கோடரி இருந்தது. சிறந்த பயிற்சி எடுத்து, நவீன சுடுபடைக்கலங்களை வைத்திருந்த அந்தப் படையினருக்கெதிராக தனித்து மனவுறுதியையே ஆயுதமாகக்கொண்டு அவர்கள் முன் சென்றார்கள். ஆனால் அதற்கு அப்பால் இராணுவ அதிகாரி ஒருவனின், காவலுக்கு நின்ற சிப்பாய்களின் துப்பாக்கிகள் இவர்களை நோக்கி சரமாரியாக இயங்குகின்றன துப்பாக்கி ரவைகள் இவனின் உயிரை முற்றாகக் குடிக்கும் வரை அவர்கள் முன்னேறினார்கள்.

www.eelamview.com

# வவுனியா சிறை உடைப்பு

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சி. ஆர். பி யினர் போரில் பங்குகொள்வதில்லை. எனவே இராணுவத் தினரது மனக் கிளர்ச்சிபோல் இவர்களும் கொள்வதில்லை. அத்துடன் இராணுவத்தினரை - அவர் எந்தப் படையணியாக இருந் தாலும் - இகழ்ச்சியாகவே மதித்தனர்.

முன்னரெல்லாம் ஒரு காவல் அரணிலிருந்து இன்னொரு காவலரணுக்குச் செல்லும் இராணுவச் சிப்பாய்கள் எமது விடுதிக்கு முன்னாலும், அருகாலுமே அடிக்கடி செல்வார்கள். பின்னர் சி. ஆர். பி யினருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அவ்விதம் இராணுவத்தினர் குறுக்கும் நெடுக்குமாகச் சிறைச்சாலை வளவுக்கூடாகச் செல்லாது விட்டது எமக்கு வாய்ப்பாகவே இருந்தது.

## சிறை உடைப்பிற்கான திட்டம்

சிறை உடைப்பிற்குத் துப்பாக்கிகள் அவசியமானவை. அந்தத் துப்பாக்கிகளை அந்த நேரத்தில் கடமையிலிருக்கும் சிறைக் காவலர்களிடமிருந்து பறித்தெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. அப்படியாயின் காவலர்களை அடித்துக் கொன்றுவிட்டே ஆயுதங்களைப் பறிக்க முடியும். அப்படிப் பறித்த பின்பும் எஞ்சிய இராணுவத்துடன் துப்பாக்கிச் சண்டை செய்தபடிதான் தப்பிப்போக வேண்டும்.

சிறை உடைப்பு நடைபெற்றுவிட்டது. என்பதை சக இராணுவத்தினர் அறிந்து அடுத்த சில நிமிடங்களில் தப்பியோடிய கைதிகள் மீண்டும் சுற்றிவளைக்கப்பட்டு பிடிக்கப்படக்கூடிய சூழல் இருந்தது.

ஏனென்றால், ஒன்றிரண்டு பேராயின் சிக்கல் இல்லை. ஆனால், 50 ற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோடப் போகின்றார்கள். இவர்கள் மக்களிடம் சென்று மறைந்து கொள்வது என்பது நடைமுறையில் சாத்தியமற்றது. அத்துடன் சிறைச்சாலைப் பகுதியிலிருந்து சுமார் 15 மைல் தூரத்திலேயே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி இருக்கின்றது. இவ்வளவு தூரத்தை விரைந்து - புற்றீசல் போல் வரப்போகும் இந்தியச் சிப்பாய்களையும் கடந்து செல்வதென்பது இலகுவான காரியமன்று.

எனவே, எமது தோழர்களிடமிருந்து - வெளியிலிருந்து உதவி கோரத் தீர்மானித்தோம்.

இப்படியாகச் சிறை உடைப்புத்திட்டம் பரந்து - விரிந்து சென்றபோது சயனைட் குப்பியின் அவசியம் உணரப்பட்டது.

ஒரு தேசபக்தனின் உதவியுடன் சில குப்பிகள் சிறைக்குள்ளே சென்றுவிட்டன.

சிறை உடைப்பில் முக்கிய பங்கு கொண்ட ஒரு தோழன் சொல்லுகிறான்...

எங்களது உறவினர்கள் கொண்டுவரும் எந்தப் பொருளுமே இராணுவத்தினரது கடுமையான சோதனைக்கு உட்படாமல் வந்ததேயில்லை. ஏதாவது ஆயுதங்கள் - பிளேற் சிறுகத்தி, அல்லது கடிதங்கள் சிறைக்குள்ளே வந்து விடுவதை தடுக்கத்தான் இந்த முயற்சிகள்.

பாதியாக்கப்படாது சமைக்கப்பட்ட முருங்கைக்காய்களை ஒவ்வொன்றாக எடுத்து உடைத்துப் பார்த்து சோதனை செய்யும் சிப்பாய்களின் கண்களையும் மீறி எமக்குக் குப்பிகள் வந்து சேர்ந்தது மிகப்பெரியதொரு சாதனைதான். இது நடந்த பின்னர் தப்பி ஓடுவது என பது சுலபமான தொன்றாகவே எனக்குப்பட்டது.

இனி சிறைக்குள்ளே நடந்த சில முன்னேற்பாடுகளைப் பார்ப்போம்.

காவலர்களை வெறுங்கையால் மடக்க முடியாது. ஏதாவது கத்தி - பொல்லு தேவைப்பட்டது. சமையலுக்கென குவிக்கப்பட்டிருந்த விறகுகட்டைகள் ஓரளவு தெம்பைத்தந்தன. அத்துடன் சிறை மலசல கூடத்திலிருந்த இரும்புக்கம்பிகளை கழற்றி வைத்திருக்கத் தீர்மானித்தோம். ஆனால், இது இலகுவான விடயமல்ல. இராணுவத்தினர் அறிந்தால் அனைத்துக் கைதிகளின் எலும்புகளும் நொறுக்கப்படும்.

அப்படியிருந்தும் ஒரு இரும்புக்கம்பி கழற்றப்பட்டு இரகசியமாக ஒழித்து வைக்கப்பட்டது. மலசல கூடத்துக் கம்பி கழற்றப்பட்டதை எப்படியோ ஒரு புளொட் அங்கத்தவன் கண்டு விட்டான். அதை தனது கூட்டாளிகளுக்குச் சொல்லி பெரிய பதற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான்.

தங்களைத் தாக்கவே அந்த இரும்புக் கம்பியை கழற்றி நாம் ஒழித்து வைத்திருப்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

காட்டிக் கொடுக்கப் போகின்றார்கள் என எமது ஆட்கள் கலங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவ்விதம் நடைபெறவில்லை.

★ நீங்கள் கூலிப்படைகள்

★ சொந்த மக்களையே ஆக்கிரமிப்பாளனுக்குக் காட்டிக்கொடுப்பவர்கள்.

★ துரோகிகள்.

★ விடுதலைப் போராட்டத்தின் விரோதிகள் என சிறைக்குள்ளே அவர்களது மூகங்களுக்கு முன்னாலேயே சொல்லம்பை வீசி வந்தது அவர்களது மனதில் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தியிருக்கலாம்.

அத்துடன் பிடுங்கப்பட்ட இரும்புக் கம்பிகள் தங்களுக்கெதிராகப் பயன்படுத்தவே என அவர்கள் கருதியதால் இதைத் தடுக்க தன்மான உணர்வுடன் செயற்படவேண்டும் என எண்ணி இராணுவத்துக்குத் தெரிவிக்காது விட்டு விட்டார்கள்.

எனவே, பதிலுக்கு தாங்களும் இரண்டு இரும்புக் கம்பிகளைப் பிடுங்கி வைத்திருந்தனர்.

சில நாட்கள் சென்றதும் அவர்கள் பிடுங்கி வைத்திருந்த இரண்டு கம்பிகளும் எமது விடுதியில் கிடந்தது. எங்களில் ஒரு தோழன் அவர்களில் ஒருவனுடன் இதமாகக் கதைத்து உடற்பயிற்சி செய்வதற்கு அவையிரண்டும் தேவை பின்னர் திருப்பித் தருகின்றோம் எனக் கூறி வாங்கிவிட்டான்.

இப்போதெல்லாம் சிறைக் கதவு திறந்து வேலைக்காக வெளியில் விடப்படும் போது எம் கவனமெல்லாம் அந்தப் பதினொரு காவலரண்கள் மீது தான் இருந்தது.

அவர்களது உடற்பலத்தை எடைபோடுவதும் உள வலிமையை ஊகிப்பதுமாகவே இருந்தோம்.

## சிறை உடைப்பு

தொழிலாளர் நாளாகிய வைகாசி 1ம் திகதியை தப்பி ஓடும் நாளாகத் தீர்மானித்தோம். எந்த எந்த அரண்களை யார் யார் சென்று தாக்குவது என்றும் முடிவு செய்தோம். அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு இரவு உணவுக்காக ஒன்றன் பின் ஒன்றாக கதவுகள் திறக்கப்பட்டு 6.00 மணிக்கு மூடப்படும். அந்த நேரத்தில் காவலர்களைத் தாக்கி விட்டுத் தப்பி ஓடுவது என்றும் தீர்மானித்தோம். இந்த முடிவு வெளியில் இருந்த எமது தோழர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

மாலை 5.30 மணிக்கு சிறைச்சாலைக்குப் பின்புறம் ½ மைல் தூரத்திலுள்ள பண்டாரிக்குளம் சந்திக்கு எமது தோழர்களை வரும்படி கேட்டிருந்தோம்.

திட்டத்தை செயற்படுத்த இருந்த தருணத்தில் தான் ஒரு நாள் ஒரு சுவையான சம்பவம் நடந்தது.

கைதிகள் தங்களது சொல்லுக்குக் கீழ்ப்படியாதுவிட்டால் சிறைக்காவலர்கள் பல்வேறு விதமான தண்டனைகளை வழங்குவார்கள் அதில் ஒன்று தான் '' மொட்டை அடித்தல் '' எமக்குத் தரப்படும் இத்தகைய தண்டனைகளுக்கு கைதிகளாகிய நாமும் பதில் நடவடிக்கையை எடுப்போம்.

எங்கள் மத்தியில் ஒருவர் மொட்டையடிக்கப்பட்ட நிலையில் நின்றால் தானே அது எதிரிக்குத் தண்டனை மாதிரித்தெரியும். எனவே நாங்கள் எல்லோருமே எமது தலைகளை மொட்டையடித்து எமது எதிர்ப்பு உணர்வுகளை வெளிப்படுத்துவோம். இந்தச் செயல் மனோவியல்ரீதியாக எதிரிக்கு நாம் கொடுத்த தண்டனையாகத்தான் இருக்கும்.

அதாவது ''எங்களுடைய ஒரு தோழனை நீ அவமரியாதை செய்வதாக நினைத்து அவனுக்கு மொட்டையடிக்கின்றாய். இந்தா! நீ தண்டனை வழங்காமலே எங்களுக்கு நாங்களே மொட்டையடித்து, நீ அவமரியாதை எனக் கருதிய அதே கோலத்தில் உன்முன்னால் நிற்கின்றோம். செய்வதைச்செய் '' என்பது போல நாமும் பதில் நடவடிக்கை எடுப்போம். இதற்கு என்ன தண்டனை வழங்குவது என்று தெரியாமல் எதிரி பல்லைக் கடித்தபடி குமுறுவான்.

இப்படியாக நாங்கள் தப்பியோடத் தீர்மானித்திருந்த நாட்களுக்கு ஐந்து அல்லது ஆறு நாட்களுக்கு முன்னர் எமது இயக்கத் தோழன் ஒருவனுக்கு ஏதோ ஒரு காரணத்திற்காகச் சிறைக்காவலர்கள் மொட்டையடித்துவிட்டார்கள்.

இயக்கம் என்ற ரீதியில் நாம் என்ன செய்யப் போகின்றோம் என்பதை ஆவலுடன் எதிர் பார்த்தபடி இருந்தான். எமக்குப் பெரிய சங்கடமாகி விட்டது.

எமது தோழனுக்காக மொட்டையடிக்க நாங்களும் தயார். ஆனால் சிறையுடைப்பை யோசித்துப்பார்த்தோம். இன்னும் ஒருசில நாட்களில் தப்பியோடப்போகிறோம். சில வேளை-வெளியிலிருந்து எமது தோழர்களிடமிருந்து உதவிகள் கிடைப்பதில் ஏதாவது தடங்கல் ஏற்பட்டால், நாம் மக்களுக்கூடாக மறைந்து மறைந்துதான் தப்பிப்போக வேண்டும். சுமார் 10 அல்லது 15 மைல்களைக் கடந்தால் தான் தப்பிவிட்டதாகக் கருதலாம். அத்தளவிற்கு இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் வவுனியா நகர்ப்புறம் கிடந்தது.

மொட்டைத் தலைகளுடன் நாம தப்பியோடுவோமாக இருந்தால், கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்படுமாக இருந்தால் எதிரிக்கு எம்மை இனங்காண்பது கடினமாக இருக்காது. '' மொட்டைத்தலையுடன் இருப்பவர்களைப் பிடியுங்கள்'' என்றதொரு ஆணையே நாம் அகப்படப் போதுமானது.

எனவே நாம் மொட்டையடிக்க முடியாது எமது தோழனை சமாளிக்க முயன்றோம். இதில் சங்கடம் என்னவென்றால், நாங்கள் எல் [illegible] பேசுகின்றோம் என்றோ, அதற்கான திட்டம் தயாராகி விட்டது என்றோ அவனுக்குத் தெரியாது.

அதை அவனிடம் சொல்லி மொட்டையடிக்கக் கூடாது என்பதற்கான காரணங்களையும் விளங்கப்படுத்த முடியவில்லை.

எனவே மொட்டையடிக்காமல் இருப்பதற்காக சில நியாயங்களை வலுக்கட்டாயமாகத் தேடிக்கண்டுபிடித்து சமாளித்துக்கொண்டிருந்தோம்.

வழமையாக கைதிகள் என்ற நிலைக்கு அப்பாற்பட்டிருந்த புளொட்டினர் நாம் மொட்டையடித்து எமது தோழரின் உணர்வுடன் கலந்துகொள்ளத் தயங்குவதை அறிந்து அவனுக்காக மொட்டையடிக்கப் போவதாக ஒரு குண்டைத் தூக்கிப்போட்டார்கள்.

அப்படிச் செய்வதன் மூலம் எமது தோழனின் மனதைக் குழப்பி எம்மில் வெறுப்புக் கொள்ளச் செய்து விடலாம் என நினைத்தார்கள். சிறைக்குட்பட்ட நிலையில் புளொட்டினர் சாதனையாக நினைப்பதில் இதுவுமொன்று.

ஆனாலும் சில - பல காரணங்களைச் சொல்லி அதையும் தடுத்து எமது தோழனையும் திருப்திப்படுத்தினோம்.

குறித்தபடியே வைகாசி 1ம் திகதியும் வந்தது எமது திட்டத்தை பெண்களுக்குத் தெரியப்படுத்த அன்று மதியம் பெண்கள் விடுதிக்குச் சென்ற சாப்பாட்டுடன் ஒரு கடிதம் வைத்து விட்டிருந்தோம். ''இன்று 5-6 மணிக்கிடையில் சிறையை உடைத்து வெளியேறப் போகின்றோம். வெளியில் இருந்து எமக்கு உதவி கிடைக்கும் உங்களது காவலாளியை நாங்கள் தாக்கும் போது உங்கள் கதவை உடைத்து வெளியேறுங்கள்'' என்று எழுதியிருந்தோம்.

அன்றைய மன உணர்வை ஒரு போராளி நினைவு கூருகின்றான்.........

அன்று காலை விடிந்ததும் இனம் புரியாத ஒரு படபடப்பு எனக்கிருந்தது. திட்டம் முடிவு செய்யப்பட்டு விட்டது. ஆனால், அது சரியாக நடைமுறையாகி வெற்றி கிட்டுமா? என மனம் படபடத்துக் கொண்டது.

உதவிக்கு நாம் அழைத்திருந்த எமது தோழர்கள் பண்டாரிக் குளத்துக்கு வந்தால் ஒரு சில நிமிடங்களில் இந்தியப்படையினரின் காதுகளுக்கு அந்தச் செய்தி எட்டும். அந்தளவுக்கு வவுனியா நகர்ப் பகுதி கூலிப்படையினரால் நிறைந்திருந்தது. அப்படிச் செய்தி வந்தால் எங்களது திட்டமே தவிடு பொடியாகும். அல்லது எங்களுடனேயே இருக்கும் புளொட் கும்பலினர் எங்களைத் தடுக்க முயன்றால் அதுவும் ஒரு பிரச்சனையாகி விடும்.

இப்படி நான் யோசித்துக் கொண்டிருந்த போது ஒரு சி. ஆர். பி காரன் எங்களைப் பார்த்து.

''நீங்கள் சரியான சோம்பேறிகள் சாப்பிட்டுச் சாப்பிட்டிட்டு படுத்துக் கிடக்

( 9 ஆம் பக்கம் பார்க்க )

# ※ தோழமை ※

05 - 02 - 1991 — நடு இரவு நேரம்
தச்சன்காட்டுச் சந்தியிலிருந்த சிங்கள இராணுவ முகாமைத் தகர்க்க நாம் பாரிய முயற்சி ஒன்றை எடுத்தோம்.
போர் முனையில் சிங்களப் படையினருடன் புலிகள் துப்பாக்கிகளால் பேசினார்கள்.
உக்கிரமான சண்டை —
ஒருவன் விழ — அவனைக் கடந்த அடுத்தவனும் விழ - அவனையும் கடந்து இன்னொருவன் பாய்ந்து, இவனும் விழ — இவனையும் தாண்டி அடுத்தவன் பாய, அவனும் விழ .....
இப்படித்தான் — ஈவை மறவழியூடு புலிகள் விழ விழ முன்னேற முயன்றார்கள்
ஆனால், முயற்சி வெற்றியளிக்கவில்லை —நாம் பின்வாங்கிவிட்டோம்.

வெடிமருந்துப்புகை காற்றோடு கலந்து மூக்கோடு மோதிக்கொண்டிருந்தது.
சண்டையின் போது எங்களில் பலரை இழந்து விட்டோம்.
பின்வாங்கும் போது அவர்களில் சிலரின் உடல்களை மீட்டுவர எம்மால் முடியாமல் போய்விட்டது.
நேற்று வரை எம்மோடு கூடித்திரிந்த தோழர்கள் உயிரற்றுக்கிடக்கிறார்கள் — எங்கள் கண்களுக்கு முன்னாலேயே —
எம்மால் நெருங்க முடியாத தூரம் — எதிரியின் எல்லைக்குள்.
நாளை விடிந்தால் —
இவர்களைக் கண்டு சிங்களப் படையினன் எக்காளமிட்டுச் சிரிப்பான்.
நாய்கள் கடித்துப் பிய்க்கும், காகங்கள் கொத்திக் கிழிக்கும், எறும்புகள் ஊரும், இலையான்கள் மொய்க்கும்.
ஓ..... அழகான, அமைதியான அந்த முகங்கள் கோரமாகும்.
இது நடக்கக்கூடாது.
எம் உயிருக்கு உயிரான தோழர்கள், தோளோடு தோள் தந்து நின்ற நண்பர்கள், உயிரினும் மேலாக இலட்சியத்துக்காக வாழ்ந்த உத்தமர்கள்.
இவர்களின் உடல்கள் பனியிலும், மழையிலும், வெயிலிலும் கிடந்து சிதைவதை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அவர்கள் மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட வேண்டியவர்கள்.

அடுத்த நாள் 06.02.1991
மீண்டும் தாக்குதல் —
எம் தோழர்களின் உடல்களிற்காக.
எங்களில் பலரை நாம் இழக்க நேரிடும் என்பது எமக்குத் தெரியும். இருந்தும் —
மூர்க்கத்தனமான தாக்குதல் —
உயிரற்றுக் கிடக்கின்ற தோழர்களை? மீட்பதற்காக எம் உயிரையும் கொடுக்கத் தயாராக —
எதிரி திகைத்துப்போயிருப்பான் —
இறுதியில் உடல்கள் மீட்கப்பட்டன. அதற்காக எமது போராளிகளில் சிலர் காயமடைந்தனர்.

www.eelamview.com

## வெளிநாடுசென்ற குடும்பங்களின் சொத்துக்களை கையேற்கின்றோம்

# இது சுவீகரிப்பல்ல

குடும்ப அங்கத்தவர்கள் முழுமையாகவே வெளிநாடு சென்றிருந்தால் அவர்களின் அசையும் அசையா சொத்துக்கள் யாவும் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரால் சுவீகரிக்கப்பட்டுவிட்டது என்றோர் தப்பபிப்பிராயம் நிலவுகிறது. சொத்துக்களின் மேல் உள்ள சொத்துடமை உரிமை முற்றாக பறிக்கப்படுவதும் இவ்விதம் பறிக்கப்பட்ட உரிமை பறித்தவனின் கைகளுக்குப் போய்ச் சேர்த்தலுமே சுவீகரிப்பு எனப்படும். இங்கு நடப்பதுவும், நடக்கவிருப்பதுவும் அதுவல்ல. குடும்பம் முழுமையாக வெளிநாடு சென்றவர்களின் அசையும் அசையா சொத்துக்கள் எதுவித குத்தகையோ, வாடகையோ இன்றி முன்னணியின் ஆட்சியுரிமையாக மாறும். முன்னணி அவ் உடமைகளை பறித்தெடுத்துக் கொள்ள மாட்டாது. சொத்துடமையாளர் திரும்பவும் வந்து அதைக்கோருவதற்கான உரிமை உடையவர். முன்னணியும் அச்சொத்துக்களை திரும்பவும் கையளிக்கக் கடமைப்பட்டது.

ஏன் இந்தச்சட்டம்? குடும்பமாக வெளிநாட்டுக்குப் போனதற்காக அவர்களுக்கு வழங்கும் தண்டனையா? அல்லது குடும்பமாய் வெளிநாடு செல்வதைத் தடுப்பதற்கானதொரு பயமுறுத்தலா? இரண்டுமேயில்லை. குடும்பமாய் வெளிநாடு செல்வது ஒரு தேசாபிமானம் அற்ற செயல் தான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

வெளிநாட்டிற்குப் போகவென்று தீர்மானித்தவர்களை பயமுறுத்துவதன் மூலம் தடுத்து நிறுத்த முடியாது. அப்படி நிறுத்தினாலுங்கூட அவர்கள் தமிழீழத்திற்கு தொல்லை தரும் வேண்டாசதைப்பிண்டமாகவே இருப்பார்கள். நாமாகவே எமக்கு தொல்லையைத்தேடிக் கொள்ள விரும்பமாட்டோம்.

யுத்தகால கட்ட தேவையே இச் சட்டத்திற்கான பிரதான காரணமாகும். எமது போராளிகள் தங்குவதற்கான பாசறைகள் எமக்கு நிறையத் தேவை. இதற்கென்று தனியான வைத்திய சாலைகள் தேவை, உணவுப்பொருட்கள், தளபாடங்கள், வாகனங்கள் ஆகியன களஞ்சியப்படுத்தும் நிலையங்கள் தேவை. இவை யுத்தத்துடன் தொடர்புபட்டன. இவைதவிர சிவில் நிர்வாகத்தைநடாத்துவதற்கான நிலையங்கள் ஏராளமாகத் தேவை. வாகனங்கள் தேவை இவற்றை மக்களிடமிருந்து அல்லது மக்களின் நிதியிலிருந்து தான் பெற்றுக்கொள்ள முடியும். இவற்றை எமக்குத் தருவதானால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை எவ்வளவிற்கு குறைக்க முடியுமோ அவ்வளவிற்கு குறைக்க முற்படுகிறோம். வெளிநாடுகளுக்கு போனவர்களின் வீட்டை எடுப்பது யாருக்குமே தொல்லையில்லாத ஒரு விடயமல்லவா?

அடுத்த விடயம் அகதிகள் பற்றியதாகும். அதிலும் குறிப்பாகத் தென்தமிழீழ அகதிகள் பற்றியதாகும். யுத்தம் எத்தனை வருடம் நீடிக்குமோசொல்லமுடியாது. அந்தளவு காலமும் இவ் அகதிகள் பாடசாலைகளிலும், கோயில்களிலும் தான் தங்க வேண்டுமா? மின்சாரமில்லை, மோட்டார்வாகனம் இல்லை, பாடசாலை வசதிகள் இல்லை குக்கர் இல்லை, உலர் உணவுகள் இல்லை என்ற காரணங்களுக்காக தமது ஊரை விட்டே குடும்பமாக வெளியேறி வெளிநாடு போபவர்கள். சொந்தமென்று சொல்லிக்கொள்ள ஊருமில்லை, குந்தியிருக்க வீடும் இல்லை என்று சொல்லிக்கொள்பவர்களுக்கு தமது வீடுகளைக் குடியிருக்கக் கொடுத்துச்சென்றால் ஏதேனும் குறைந்துவிடுமா என்ன? தாமாகவே செய்யவேண்டிய இப்பிரச்சனையை தாமாகவே செய்யாமல் நாமாகச் செய்தால் அது தவறாகுமா?

மூன்றாவது விடயம் ஆள் இல்லாத வீட்டையும் வளவையும் சண்டித்தனம் மிக்கவர்களும்,கபடதாரிகளும் பலவழிகளைப் பிரயோகித்து தமதாக்க முற்படுவார்கள் என்பது சகலரும் அறிந்ததே. இக் காரணத்தையொட்டி சண்டைகளும் எழும். கபடதாரிகள் இதை நன்றாகக் குழப்பியடித்து தீர்வுக்கு சிரமமானதொன்றாக்கிவிடுவார்கள். அப்புறம் அதைத்தீர்க்க வேண்டியபொறுப்பும் எம் தலையில்தான் கட்டியடிக்கப்படும். வெள்ளம் வருமுன்பே அணைகட்டுவது ஒன்றும் தவறில்லையே. ஆள் இல்லாத வீட்டையொட்டி எழும் சண்டைகளுக்கு முற்றுப்புள்ளியிடப்படும். விடில்லா ஆட்களின் பிரச்சனையும் சுமுகமாகத் தீர்க்கப்படும். வீட்டைவிட்டுச் சென்ற ஆட்கள் திரும்பி வருவார்களானால் அவர்கள் சிக்கலான பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் சந்தர்ப்பங்களும் இல்லாமற் செய்யப்படும்.

ஆகவே இது வீட்டின் நலனையும், அகதிகள்நலனையும், எமது இயக்கத்தின் தேவையையும் மனதில் கொண்டு ஆக்கப்பட்ட ஒரு சட்டமே தவிர இது ஒரு சுவீகரிப்புச் சட்டமல்ல.

## புலிகளின் குரல்....

( 2 ஆம் பக்கத் தொடர்ச்சி )

இந்தியா தயங்காது என்ற தொனியில் பேசியிருக்கிறார்''. ''உங்களுக்கு இப்பொழுதுதேவைப்படுவது சிறிய ரக ஆயுதங்கள் போலத் தெரிகிறது. என அவர் குறிப்பிட்டதைப் பார்த்தால் அந்த ஆயுதங்களை இந்தியா கொடுத்துதவ ஆயத்தமாக இருக்கிறது என்ற அர்த்தம் தொனிக்கிறது. அப்படித்தான் இந்திய அரசு சிறீலங்காவுக்கு ஆயுத உதவி செய்வதற்கு முன்வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆயுதக் கொள்வனவில் சீனாவிடமும், பாகிஸ்தானிடமும் தங்கியிராது சிங்கள அரசு தன் மீது தங்கியிருப்பதை இந்தியா விரும்பக் கூடும். இந்தியாவின் இன்றைய தலையீட்டில் இது ஒரு புதிய பரிமாணமாகவும் அமையலாம்.

தமிழீழ சுதந்திரப்போரில்விடுதலைப்புலிகளின் கை ஓங்கி வருவதை இந்தியா விரும்பவில்லை. தொடர்ச்சியாக சிங்கள இராணுவம் தோல்விகளைச் சந்தித்து வருவதும் இந்திய ஆளும்வர்க்கத்திற்கு அச்சத்தைக்கொடுத்திருக்கிறது. தமிழரின் சுயநிர்ணய உரிமைப்போர் வெற்றிபெறும் வாய்ப்பு ஏற்பட்டால் அகில இந்திய ரீதியில் அது பாரிய தாக்கங்களை விளைவிக்குமென டில்லி ஆட்சி பீடம் பயப்படுகிறது. ஆகவே சிங்கள இராணுவம் பாரிய தோல்விகளை சந்தித்து அரசின் ஸ்திரநிலை குலைவதற்கு முன்னர் சிறீலங்காவுக்கு கை கொடுத்து உதவ இந்தியா முன்வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் வேண்டுமென்றால் ஆயுத உதவிகளையும் செய்ய தயங்கப் போவதில்லை, பிரேமதாசா அரசை ஆட்டம் காணவிடாமல் ஸ்திரநிலையில் வைத்திருப்பது இந்தியாவின் பொருளாதார நலன்களைப் பேணுவதற்கும் வாய்ப்பளிக்கும். ஏற்கனவே இந்தியாவுக்கும், சிறீலங்காவுக்கும் மத்தியில் கூட்டுப்பொருளாதார உடன்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. திருக்கோணமலை எண்ணெய்க் குதங்களைச் சீரமைத்து இந்தியக் கடற்படையின் பாவனைக்கு அனுமதிக்க சிங்கள அரசு இணங்கியிருக்கிறது. அடுத்ததாக மன்னார்க்குடா கடற்படுக்கையிலுள்ள பாரிய ரீதியில் எண்ணெய் வளத்தை ஆராய்ந்து, அந்த எண்ணெயை இரு நாடுகளும் பகிர்ந்தெடுப்பது.

திருமலைத் துறைமுகமும், மன்னார் கடற் பிரதேசமும் தமிழர் தாயகத்தில் அமையப்பெற்றிருக்கின்றன. இந்தப் பிரதேசங்கள் தமிழீழ மக்களின் சொத்துடமை. இந்தப் பிரதேசங்களிலுள்ள மூல வளங்கள் அனைத்தும் தமிழீழ மக்களுக்குச் சொந்தமானது. எனவே எமது மக்களின் அனுமதியின்றி, எமது மக்களைக் கலந்தாலோசிக்காமல், இரு அந்நிய நாடுகள் எமது மக்களுக்கு உரித்தான செல்வத்தை சுரண்டுவதற்கு திட்டமிட்டுள்ளன. இது எமது மக்களின் பிரதேச ஆட்சியுரிமையைப் பாதிக்கும் பாரதூரமான விடயம்.

இயற்கையாக அமையப்பெற்றதும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததுமான திருமலைத் துறைமுகம் மீது உலக வல்லரசுகள் நீண்ட காலமாகக் கண்வைத்து வந்தன. இப்பிரதேசத்தில் உலக வல்லரசுகளின் ஊடுருவல்களை விரும்பாத இந்திய ஏகாதிபத்தியம் திருமலைத் துறைமுகத்தைத் தனது கடலாதிக்கத்தின்கீழ் கொண்டுவரத் திட்டமிட்டது. 1987 இந்திய — இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் திருமலைத்துறைமுக எண்ணெய்க்குதங்களை திருத்தியமைக்கும் பொறுப்பை இந்தியா தனதாக்கிக்கொண்டது. இந்த எண்ணெய் குதங்கள் திருத்தியமைக்கப்பட்டதும் துறைமுக எண்ணெய் வசதிகளைப் பயன்படுத்தப்போவது இந்திய கடற்படையின்றி வேறுயாருமல்ல. அந்த சூழ்நிலையில் திருமலைத் துறைமுகம் இந்தியாவின் தென்பிராந்திய கடற்தளமாக மாறிவிடும் பேராபத்து ஏற்படப்போகிறது. இதனால்தான் இந்த ஒப்பந்த விதிக்கு தென்னிலங்கையில் எதிர்ப்புக் கிளம்பியது. இலங்கையின் இறைமையை இந்தியாவுக்கு விற்றுவிட்ட ஒரு தேசத்துரோகி என ஜெயவர்த்தனாமீது ஜே. வி. பி. இயக்கம் குற்றம்சாட்டியது. பிரேமதாசா ஆட்சியேறிய போது இந்த ஒப்பந்தவிதி நீக்கப்படவேண்டும், இலங்கையின் இறைமையைப் பாதிக்காத புதிய நட்புறவு ஒப்பந்தம் செய்யப்படவேண்டும் என வலியுறுத்திவந்தார். ஆனால் இப்பொழுது அவரது நிலைப்பாடு மாறியிருக்கிறது. திருக்கோணமலைப் பிரதேசத்தை சிங்களமயமாக்கி, வடக்கையும் கிழக்கையும் பூகோள ரீதியில் துண்டித்துவிடுவது சிங்கள அரசின் திட்டம். தமிழரின் பிரதேச ஆட்சியுரிமையின் கீழ் திருமலை கொண்டுவரப்படக்கூடாதென்பதும், அது தமிழீழத்தின் தலைநகராக மாறக்கூடாது என்பதும் சிங்கள ஆளும்வர்க்கத்தின் நீண்டகால அபிலாசை. இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதாயின் இந்தியாவின் ஆசி தேவை. இந்தியாவின் கேந்திர அபிலாசைகளுக்கு விட்டுக்கொடுத்தால் தமிழர் தாயகத்தை கூறுபோட்டு சிதைப்பதற்கு இந்தியா ஆட்சேபிக்காது. எனவேதான் இந்திய — இலங்கை ஒப்பந்த விதிகளை நடைமுறைசெய்யப் பிரேமதாசா அரசு இணங்கியிருக்கிறது.

மன்னார் கடற்பிரதேசத்திலுள்ள எண்ணெய் வளம் தமிழீழத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இப்பிரதேசத்தில் முன்பு ரஷ்ய கடல்வள நிபுணர்கள் ஆராய்ச்சிகளை நடாத்தி எண்ணெய்ப்படிவங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தார்கள். எனினும் சிங்கள அரசு நீண்டகாலமாக இதுபற்றி மௌனம் சாதித்துவந்தது. இப்பொழுது இந்தியாவின் உதவியுடன் மன்னார்க் கடலில் எண்ணெயைத் தோண்டி எடுத்து அதைப் பகிர்ந்துகொள்ள சிங்கள அரசு முடிவுசெய்திருக்கிறது. இந்தத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் தமிழீழ மக்களுக்கு உரித்தான செல்வம் இந்திய, சிங்கள முதலாளி வர்க்கத்தால் சூறையாடப்படும். எண்ணெய்வளம் பறிபோவதோடு கடற்சூழல், உயிரின வாழ்வும் சிதைக்கப்படும். இந்த நாசகாரத்திட்டத்தை தமிழீழ மக்கள் அனுமதிக்கக்கூடாது.

இன்றைய இந்திய தலையீட்டின் அந்தரங்க நோக்கங்களும், குறிக்கோள்களும் தமிழீழ மக்களின் தேசிய நலனுக்கு பாதகமானவை. எமது சுயநிர்ணய உரிமைப்போராட்டத்திற்கு விரோதமானவை, எமது தாயகத்தின் மீதுள்ள எமது பிரதேச ஆட்சியுரிமைக்கு குந்தகமானவை. புதிய பரிமாணத்தில் வரும் இந்திய ஏகாதிபத்தியத்தின் ஊடுருவல்களை எமது மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இந்தியாபற்றிய மருட்சியிலிருந்து விடுபட்டு புரட்சிகரமான விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்ளலாம்.

## வவுனியா சிறை...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறியன்'' என்று கேலிபேசிக் கொண்டு போனான். எனது சக தோழர்கள் எனக்குக் கண் ஜாடை செய்து புன்னகைத்தார்கள்.

அந்தச் சிப்பாய் வழமையாக அப்படித்தான் எங்களைக் கேலி செய்வான். இன்று பின்னேரம் இந்தச் சிறைக்குள் ஒரு பூகம்பம் வெடிப்பதற்கான தயாரிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்தது அந்தக் காவலாளிக்குத் தெரியாது.

### மாலை 5. 30 மணி

2ம் நம்பர் வீடு மாலைக்கடனுக்காகத் திறக்கப்பட்டது. வெளியே வந்த நாம் சிறைச் சுற்றாடலை ஒரு முறை நோட்டமிட்டுவிட்டு சமையல் அறைக்குள் இருந்த கோடரிகளை எடுத்துக் கொண்டு எமக்கு எமக்கு என்று ஒதுக்கப்பட்ட காவலரண்களை நோக்கிச் சென்றோம்.

அப்போது ஒரு ட்ரக் எமது சிறைவாசலில் வந்து நிற்கின்றது. அதற்குள்ளிருந்து 10 இராணுவத்தினர் இறங்கினர். எமக்குப் பேரதிர்ச்சி ஒரு வேளை எமது திட்டம் இராணுவத்திற்குத் தெரிந்துவிட்டதா என குழம்பினோம்.

எடுத்து வந்த கோடரிகளை வைத்திருக்கவும் முடியவில்லை. கொண்டு சென்று சமையல் அறையில் வைக்கவும் முடியவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தோம். மனம் படபடத்துக் கொண்டிருந்தது. பல கைதிகளுக்கு சிறை உடைப்பைப் பற்றியே தெரியாது. அவர்கள் ட்ரக் வந்து நிற்பதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

சில நிமிடங்களில் ட்ரக் வந்தவர்களையும் ஏற்றிக் [illegible] போன திசையை வைத்த கண் வாங்காது பார்த்தோம். ட்ரக் மறைய மறைய எங்களது முகங்கள் பிரகாசமடைந்தன. அந்த மகிழ்ச்சிகணப் பொழுது தான் நீடித்தது. அதே பாதையாலே ஏறிக்கொண்டு வந்த ஜீப் ஒன்று சிறைவாசலுக்கு வந்து நின்றது. அந்தக் கணத்தில் எனக்கு உலகமே வெறுத்தது.

ஆனால், ஜீப் வந்த வேகத்திலேயே திரும்பவும் சென்றுவிட்டது. நேரம் 5-45 மணி. எல்லோரும் எமக்குள் சைகை காட்டி சிறை உடைப்பைத் தொடங்கினோம்.

காவலரண் 3 இல் நின்ற காவலாளியை நோக்கி ஓடிச் சென்று கோடரியால் தாக்கி அவனது துப்பாக்கியைப் பறித்து அவன் சுடப்பட்டான்.

அதேபோல் காவலரண் 6 இல் நின்றவனையும் சுட்டு அவனது எஸ். எல். ஆர் துப்பாக்கியும் எடுக்கப்பட்டது.

காவலரண் 4 இலேயே இயந்திரத் துப்பாக்கி இருந்தது. அதை எடுப்பதற்காக மூன்று தோழர்கள் இரும்புக்கம்பியுடனும், விறகு கொட்டன்களுடனும் சென்றனர். இந்த இயந்திரத்

(11ஆம்பக்கம்பார்க்க)

www.eelamview.com

## மணலாறு மாவட்டம்.

தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை காலங் காலமாக சிங்களத் தலைவர்கள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வந்தார்கள். கல்லோயா, கந்தளாய், பதவியா ஆகிய சிங்களக் குடியேற்றத் திட்டங்களை தொடர்ந்து, அண்மையில் எமது கண்ணுக்கு முன்னால் ஒரு சிங்களக்குடியேற்றத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அது தான் வெலிஓயா (மணலாறு) குடியேற்றத் திட்டம்.

மகாவலி " L " வலையம் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம் மூன்று வழிகளில் செயற்படுத்தப்பட்டது. ஒரு புறத்தே, தமிழருக்குச் சொந்தமான டொலர், கென் பண்ணைகளிலிருந்து தனிக்கல்லு வரை ஒரு சிங்களப் பரம்பல் நடந்தது. இதற்காக அங்கிருந்த தமிழ் மக்கள் விரட்டி அடிக்கப்பட்டார்கள். அதே போல் கொக்கிளாய் ஆற்றிலிருந்து முல்லைத்திவை நோக்கி ஒரு கரையோர ஆக்கிரமிப்பு நடந்தது. இவை இரண்டுக்குமிடையே முந்திரிகைக் குளத்தை மையமாக வைத்தும் ஒரு சிங்களக் குடியேற்றப்பரம்பல் நடந்தது.

1984ம் ஆண்டின் இறுதியில் டொலர், கென் பண்ணைகள் மீதும், கொக்கிளாய், நாயாறு குடியேற்றவாசிகள் மீதும் புலிகள் ஒரு தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டார்கள். இதன் மூலம் அத்தமிழ்க் கிராமங்களிலிருந்து சிங்களக் குடியேற்றவாசிகள் அகற்றப்பட்டார்கள். ஆனால், அதன் பின்பு இப்பகுதியை தடை வலையமென பிரகடனப் படுத்திய சிங்கள அரசினர், முழுமையான பாதுகாப்புடன் ஆயுதம் தரித்த சிங்களக் கிராமங்களை ஏற்படுத்தினார்கள். புலிகளின் தொடர்ந்த இடைவிடாததாக்குதல்கள் காரணமாக சிங்களக் குடியேற்ற வாசிகளால் அங்கு நிலைகொள்ள முடியவில்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, புலிகளின் தாக்குதல் நிறுத்தத்தைப் பயன்படுத்தி இக்குடியேற்றத் திட்டத்தை சிறிலங்கா அரசு மிகவேகமாக வளர்த்தது. ஆனால், இந்தியப் படைகளுடனான யுத்தம் தொடங்கிய பின் மணலாறு மாவட்டம் ஒரு புதிய பரிமாணத்தை அடைந்தது. இந்த மண்ணில் ஏற்பட்ட தோல்வியோடு இந்தியப்படை வெளியேறியது.

தமிழர் படை பலம் பெற்றதைத் தொடர்ந்து கொக்கிளாய், நாயாறு, கொக்குத்தொடுவாய் உட்பட மேலும் பல கிராமங்களில் தமிழ் மக்கள் மீண்டும் நிலைபெற்றுக்கொண்டார்கள். ஆனால் இம்மாவட்டத்தின் பெரும்பாலான பகுதி எதிரியின் வலைக்குள் விழுந்தே கிடந்தது.

இந்த அழகான, வளம்மிக்க தமிழருக்குச் சொந்தமான தமிழீழ மண்ணை மீட்பதற்காக — காப்பாற்றுவதற்காக எத்தனையோ போராளிகள் வீரமரணத்தைச் சந்தித்துக் கொண்டார்கள். அவர்களில் ஒருவன் தான் மேஜர் சங்கர்.



# ஒரு போராளியின் குருதிச் சுவடுகள்...

பழைய தம்பலகமத்தை இப்போது பார்க்க முடியாது. ஆனால் சொல்ல முடியும், இன்று அகதி முகாங்களில் சிறைவாழ்க்கை வாழும் எங்கள் மக்கள் எல்லாம் அந்த நேரத்தில் கிராமங்களிலிருந்தார்கள்.

பரந்த வயல்வெளிகள். வளமான நிலம். வயல்களுக்கு நடுவே சிறிய மேட்டு நிலப் பரப்புகளில் கிராமங்களிருந்தன. பழமை நிறைந்த பசுமையான கிராமங்கள் அவை. அப்படிப்பட்ட ஒரு கிராமமான கள்ளி மேட்டில் தான் சங்கரும் பிறந்தான்.

இளவயதில் சங்கர் மிக மோசமான குழப்படிக்காரன். முரட்டுத்தனமான கிறுக்கன். ஆனாலும் அடிமனதில் தன் மண்ணையும், மக்களையும் மிகவும் நேசித்தான்.

தம்பலகமப்பகுதி அவனது வாழ்வுக் காலத்திலேயே பறிபோனது - பறிபோய்க்கொண்டிருந்தது. தமிழருடைய வயல் நிலங்களும், கிராமங்களும் சிங்களவருடையதானது. தமிழர்கள் சினந்த பொழுது துப்பாக்கிகள் பதிலளித்தன. வயல்கள் இரத்தத்தால் நனைந்தன. அங்கு வாழ்வதற்கு ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாதது என்பதை, சங்கர் உணர்ந்து கொண்டான்.

அவன் பிறந்த மண்ணின் தேவை அவனை ஒரு போராளியாக மாற்றியது. 1985இன் ஆரம்பத்தில் அவன் விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொண்டான்.

பயிற்சி முகாம் வாழ்வின் பொழுதே சங்கர், போராட்டக் களங்களைச் சந்திக்கத் தொடங்கினான்.

திருமலை மண்ணுக்குச் சில இயல்புகள் உண்டு. போராட்டத்தின் விளைவுகளால் இழப்புக்களையும், துன்பத்தையும் சந்தித்த இந்த மக்கள் தாமும் போராளிகளாகவே வாழ்ந்தார்கள். போராளிகளின் துன்பத்திலும், போராட்ட வாழ்விலும் இணைந்து கொண்டார்கள். தாக்குதற் சம்பவங்களில் கூட கலந்து கொண்டார்கள். இத்தகைய ஒரு தாக்குதல் நடவடிக்கைதான், 1985 ஆவணியில் தெகிவத்தையில் நடந்தது. தம் கிராமங்களை ஆக்கிரமித்திருந்த சிங்களக் காடையர்களுக்கும்; அவர்களின் ஆயுதப்படைக்கும் எதிராக மக்கள் புலிகளுடன் இணைந்து நின்றார்கள். அது தான் சங்கரின் முதற்தாக்குதற் களமும் ஆகும். அது ஒரு வெற்றிகரமான தாக்குதல். அன்று தான் தமிழீழப் போராட்டத்தில் எதிரியிடம் இருந்து முதல் இலகு இயந்திரத் துப்பாக்கியும் (எல்.எம்.ஜி) கைப்பற்றப்பட்டது.

சங்கரின் இரண்டாவது தாக்குதல் நடவடிக்கையும், அவன் பயிற்சி முகாம் போராளியாக இருக்கும் பொழுதே நிகழ்ந்தது.

பாலம் போட்டாறு என்ற இடத்தில், இராணுவ வண்டித்தொடர் ஒன்றை தாக்குவதற்காக புலிகள் பதுங்கிக் கிடந்தார்கள். அதில் சங்கரும் ஒருவன். மனித வரவற்ற அவ்வீதியால் மெதுவாக வந்த இராணுவ வாகனத் தொடரின் முதல் ஜீப் வண்டி சிதறியது. பின்னால் வந்த றக் வண்டி மீது புலிகளின் துப்பாக்கிகள், ரவைகளைக் கக்கின. சிறிது நேரத்தில் அந்த றக் வண்டி மௌனமானது. வீழ்ந்த இராணுவத்திடமிருந்து, புலிகள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டிருந்தனர். அந்நேரம் றக் வண்டியின் ரயர் மறைவிலிருந்த ஒரு சிப்பாய் புலிகளை நோக்கி......

சங்கர் இதைக்கவனித்தான்.

எதிரியின் துப்பாக்கிரவையிலிருந்து தப்புவதற்கு எந்த மறைவுமே இல்லை, ஒரு கணம் தாமதித்தாலும் எங்கள் போராளிகளிற் சிலர்......

சங்கர் கத்திக் கொண்டே அச்சிப்பாயை நோக்கி முன்னேறினான், அவனது துப்பாக்கி, ரவைகளை வீசிக் கொண்டிருந்தது.

தனது உயிரைவிட தன் தோழர்களின் வாழ்வே அவனது கண்ணுக்குள் தெரிந்தது. அவனது வீரம், விடுதலைப் பற்று. தோழர்கள் மீதான அன்பு அனைத்துமே அன்று வெளிப்பட்டது.

அச்சிப்பாய் வீழ்த்தப்பட்டு அச்சண்டை இழப்புகள் இல்லாது வெற்றியடைந்தது.

அத்தாக்குதல் முடிந்து அவனுடைய கிராமத்தின் வழியாக அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள். சங்கரின் தாய் அவனில் மிகவும் அன்பு கொண்டவள். தன் மகன் போராளியாக மாறியதில் பெருமைப்பட்டுக் கொள்பவள். அவ்வழியால் போராளிகள் வருகிறார்கள் எனக் கேள்விப்பட்டு அந்தத் தாய் வாசலில் காத்துநின்றாள்

ஒருவேளை தன்மகனும் வரக்கூடும்......

அவர்கள் வந்த உழவுயந்திரம் அவளைத்தாண்டிச் சென்று சிறிது தூரத்தில் நின்றது. சங்கர் இறங்கி ஓடிவந்தான். தன் தாயுடன் இணைந்து கொண்டான். போராளிகள் மௌனமாகப் பார்த்து நின்றார்கள்.

தாயையும், தாயைப்போல தாய் நிலத்தையும் அளவு கடந்து நேசிப்பதால்தான், புலிகளையும் விடுதலைப் போராட்டத்தையும் ஒருவராலுமே வெற்றிகொள்ள முடிவதில்லை. ஆனால் சங்கரின் இறுதி நாட்களில் அவனுக்கு தனது தாயோ, சகோதரர்களோ எங்கிருக்கிறார்கள் என்று கூடத் தெரியாது. அவனது கிராமம் அழிக்கப்பட்டதும் கிராமத்தவர்கள் முகவரியில்லாமல் போய்விட்டதும் தான் அவனுக்குத் தெரியும்.

சங்கர் தொடர்ந்து பல தாக்குதல் நடவடிக்கைகளில் பங்கு பற்றினான். ஒரு வருடத்தின் பின் அவன் ஒரு தாக்குதல் அணிக்குப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். இந்தியப்படை தமிழீழ மண்ணில் வந்த நேரம். அவனும் அவனது தோழர்களும் இரு நாட்டுப் படைகளிற்கெதிராகப் போராட வேண்டியிருந்தது.

1988 இன் ஆரம்பப் பகுதியில் சங்கர் மூதூர் பிரதேசப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். மூதூர்ப்பகுதியில் இந்தியப்படையினர் பெருமளவில் குவிந்து இருந்தனர். அங்கு சங்கரும் அவனது தோழர்களும் மக்களுடன் கலந்தே வாழ்ந்தார்கள், எதிரியின் கண்களிற்குள் உலாவிக் கொண்டே அவனது நெற்றியில் அடிக்கவும் அவர்கள் தவறவில்லை. இந்தியப் படையினர் மீதும், தேசவிரோதிகள் மீதும் சங்கர் பலமுறை தாக்குதல்களை திட்டமிட்டு நடாத்தினான்.

ஆனால் ஒரு நாள், வெருகல் முகத்துவாரம் என்ற கிராமத்தில், தேசவிரோதிகளினதும், இந்தியப்படையினரதும் சுற்றிவளைப்பிற்கு நடுவே சங்கர் சிக்கிக்கொண்டான். சங்கரை நோக்கி அவர்களது துப்பாக்கிகள் இயங்கின. நெஞ்சிலும், காலிலும் துப்பாக்கி ரவைகள் ஆழமாகப் புதைந்தன. ஆனாலும் சங்கர் சுற்றிவளைப்பிலிருந்து வெளியே வந்தான்.


அவனது காயங்களோ ஆபத்தானவை. அன்று சங்கரைக் காப்பாற்றுவதற்காக எமது போராளிகள் மிகவும் கஸ்டப்பட்டார்கள். இளம் புலிகளே வைத்தியர்களாகவும், தாதிகளாகவும் மாறினார்கள். ★ ★ ★

சங்கர் குணமடைந்த பின்பு மணலாறு மாவட்டத்தில் ஒரு போராளியாக நின்றான். இந்தியப் படையினரின் மிக மோசமான நடவடிக்கைகளுக்கு புலிகள் இங்கு தான் பதிலளித்தார்கள். இந்தியப் படையினருடன் இப்பகுதியில் நடந்த கடும் சண்டைகளில் சங்கரும் ஒருவனாக கலந்து கொண்டான்.

இந்தியப் படை வெளியேற்றப்பட்டது. மணலாறு மக்கள் தமது கிராமங்களுக்குத் திரும்ப வந்தார்கள். சிதைந்து, அழிந்து போய்க் கிடந்த கிராமங்கள் மீண்டும் எழுந்தன. சங்கர் மணலாறு மாவட்டத்தை மனதார நேசித்தான். அவன் பிறந்து வளர்ந்த மண்ணைப்போன்று தான் மணலாறும் எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டு சிதைந்து போய்க்கிடந்தது. அவனது கிராமத்து மக்களைப் போன்றுதான் இங்கும் உயிருக்கு மேலாக விடுதலையை நேசிக்கும் மக்கள் இருந்தனர்.

இந்த மண்ணில், சிங்களப் படைகள் மீண்டும் ஒரு வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டபொழுது புலிகள் எதிர்த்து நின்றனர். கொக்கிளாய் இராணுவ முகாமிலிருந்து, தமிழ் கிராமங்களை நோக்கி சிங்கள இராணுவத்தினர் புறப்பட்ட பொழுது, புலிகள் தடுத்து நின்றனர். முன்பு போல் தமது அழிவு நடவடிக்கைகளை மிக இலகுவில் செய்ய முடியாது என சிங்களப் படையினர் உணர்ந்துகொண்டார்கள்.

( 11ஆம் பக்கம் பார்க்க )



## மேஜர் சங்கர்

அ. லவலோகிதன்

— தம்பலகமம் —

பிறப்பு: 8. 8. 1967

வீர மரணம்: 1. 11. 1990

www.eelamview.com

## போராளியின் குருதி..

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கர், சிறிது காலத்திற்கு கொக்கிளாய் இராணுவ முகாமிற்கு அருகில் இருந்த புலிகளின் காவலரண்களுக்குப் பொறுப்பாளனாக இருந்தான். தொடர்ந்து சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்கள் பலவற்றில் கலந்து கொண்டான்.

அந்நேரத்தில், மணலாறு மாவட்டத்தில் அமரிவயல் கிராமத்திற்கு அருகில் ஒரு சிறிய சிங்கள ராணுவ முகாம் புதிதாக அமைக்கப்பட்டது. அப்பகுதியில் சிங்களக் காடையரின் குடியேற்றத் திட்டம் முனைப்புப் பெறப்போவதை புலிகள் உணர்ந்து கொண்டார்கள். அவ் இராணுவ முகாமைத் தாக்கி அழிப்பதற்குத் திட்டமிடப்பட்டது. அந்தப் பொறுப்பு சங்கரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவனுக்கு மகிழ்ச்சி,

ஆனால், அதுதான் அவனுடைய இறுதிப் பயணம். தாக்குதலுக்குச் செல்வதற்கு முன் தனது நண்பர்களைச் சந்திப்பதற்காக சங்கர் அயற் கிராமம் ஒன்றிற்குச் சென்றான். அங்கு அவன் தைக்கக் கொடுத்திருந்த புதிய சீருடையையும் எடுத்து வர வேண்டியிருந்தது. புதிய சீருடையுடன் போர் முனைக்குச் செல்வதை அவன் விரும்பினான். சீருடை அணிந்தவுடன் இயல்பாகத் தோன்றும் வீரமும், உறுதியும் ஒரு தனி வகையானது தான்.

போராட்ட வாழ்வை நீண்ட காலம் ஒன்றாகவே கழித்த அவனது நண்பர்களைச் சங்கர் சந்தித்தான். இயல்பான அவனது குறும்புத் தனமும் சேர்ந்து கொள்ளவே, அவர்கள் கட்டி அணைத்தார்கள். நாயாற்றின் மணற்தரை முழுவதும் உருண்டு, பிரண்டார்கள். இடையில், உனது புதிய ஆடை தைக்கப்படவில்லை என ஒருதோழன் கூறினான்.

அவனது முகம் ஒரு கணம் கறுத்துச் சோகமானது. அடுத்தகணம் அவன் மன நிலையை மாற்றிக் கொண்டான். மகிழ்ச்சியான நிமிடங்கள் கழிந்தன.

01-11-1990,
விடியலின் நேரம்.

அந்தச் சிறிய இராணுவ முகாமினுள் இராணுவத்தினரின் அசைவுகள் நிழலாகத் தெரிந்தன. வயல் வெளியில் எழுந்து நின்ற புதர்களிற்குள் புலிகள், பதுங்கி இருந்தனர். சரியான நேரத்திற்காகச் சங்கர் காத்திருந்தான். எல்லாம் சரி......

இராணுவ முகாமை நோக்கி தொடர்ச்சியாக ரவைகளைச் சிந்தியபடியே சங்கரும் அவனது தோழர்களும் முன்னேறினார்கள், எதிரி கடுமையாகவே எதிர்த்தான், எம்மில் இரு போராளிகள் விழுந்தனர்.

சங்கர் எனும் வீரகாவியத்தின் இறுதி அத்தியாயம் அன்று எழுதப்பட்டது. சிறிது நேரத்தில் புலிகளிடம் அந்த முகாம் வீழ்ச்சியடைந்தது. ஆனால் அந்த ஆக்கிரமிப்புச் சின்னத்தை அகற்றுவதற்குக் காரணமாக இருந்த சங்கர் வீர மரணத்தைச் சந்தித்துக் கொண்டான். அவனுடன் இரண்டாவது லெப். மதுவன், முசோலினி ஆகிய போராளிகளும் வீரமரணத்தை தழுவி இருந்தார்கள்.

போர் முனைக்குச் செல்லும் பொழுது அணியவிரும்பிய புதிய சீருடையில் இப்போது சங்கர் இருந்தான். அவனுடன் மற்றைய இரு போராளிகள், அந்த வீர மறவர்கள் அவர்கள் நேசித்த மணலாறு மண்ணில் விதைக்கப்பட்டார்கள்.

— சஞ்சய் —

## நெஞ்சை நிமிர்த்து நிலவுக்குக் கை நீட்டு...

ஆதிச்சிவனாரே
அம்மனுக்குப் பங்களித்து
பாதிச்சிவனாகிப் பாகம் பிரித்த பின்பும்
நீதி வரவில்லை.

நெடுமூச்சைக் காற்றிலிட்டு
பாதி உலகம்
படுக்கையறை இயந்திரமாய்
பூச்சூடி
பொட்டிட்டு
புன்னகையை முகத்தேற்றி
பேச்சின்றிக் கிடக்கின்றது.

கத்தரிக்காய் பொரிப்பதற்கா கையுனக்கு?
நீர்க்குடங்கள்
இட்டுச் சுமப்பதற்கா இடையுனக்கு?
பிள்ளையது
தொத்திக்கிடப்பதற்கு மட்டுமா தோளுனக்கு?
இல்லையம்மா......

காதலெனச் சொல்லி கடிதமெனக் கவியெழுதி
போதை வரச்செய்து பூச்சூடி வைத்துவிட்டால்
பெண்ணே அதிலுனக்கு பெரிதான
மகிழ்ச்சி யென்ன?

தூளிடித்து
மாவிடித்து
சூடை மீன் குழம்பு வைத்து
பாழிருட்டில் தூங்கும் பழக்கமதைக் கைவிட்டு
சிங்க வேட்டைக்குச் சிலிர்த்தெழும்பி வந்துவிடு

தும்பி பிடிப்பதற்கே
துணிவில்லாப் பெண்களென
எள்ளி நகைப்பவரை
இடித்துப் புறந்தள்ளு.

சீதனத்தை வாங்கி
சிறை கொள்ளும் ஆணினத்தை
காதணியால் வீசிக் கைவிலங்கு போடஎழு:

பெண்ணென்றால்
ஏதோ போதையென எண்ணுகின்ற
மண்ணினைவைத்தூக்கி மறியலிலேபோட்டிட வா

துள்ளி எழும்பு
சூரியனைக் கொண்டேவா
நெஞ்சை நிமிர்த்து
நிலவுக்குக் கைநீட்டு

ஆண்களுடன் பெண்களுமே
அனைத்திலுமே சமதையென
நீண்டு கிடக்கின்ற நிலமதிலே... நிமிருங்கள்.

உன்னால் முடியும்
உலகத்தைப் புரட்டிவிட
உன்னால் முடியுமம்மா.

## மும்முனைத் தாக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுத் தாக்கப்பட்டது. சுமார் ஐந்துமணிநேரம் நடைபெற்ற இந்தச் சண்டையின் பின் இழப்புக்களுடன் அந்த அணி தாண்டிக்குளம்வரை பின்னோக்கித் தள்ளப்பட்டது.

இந்தச் சண்டையில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து ஏ. கே ரக துப்பாக்கிகள் ஐந்தைக் கைப்பற்றினோம்.

இதே போன்று சாஸ்திரி கூழாங்குளம், தொச்சி மோட்டை ஆகிய இடங்கள் வரை முன்னேறிய இராணுவ அணிகளும் தாண்டிக்குளம் வரை விரட்டப்பட்டனர்.

தொடர்ந்தும் 12. 02. 1991 அன்றும் கடுமையான எறிகணைத்தாக்குதலுடன் படையினர் மேலும் முன்னேற முயன்றனர். எமது வீரர்களின் உறுதியான பதில் நடவடிக்கைகளினால் அது நடைபெறாமல் தடுக்கப்பட்டது.

வவுனியாவில் கடும் சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேசமயம் 13.02.1991 அன்று முல்லைத்தீவிலும் சண்டை ஆரம்பமாகியது.

முல்லைத்தீவு முகாமிலிருந்து சிலாவத்துறையை நோக்கி படையினர் முன்னேற முயன்றனர். இவர்களுக்கு உதவியாக விமானங்களும், கடற்படைக்கப்பல்களும் குண்டுகளை வீசித் தாக்குதல்களை நடாத்தின. இந்தச் சண்டைகள் 14, 15, 16ம் திகதிகளும் தொடர்ந்து நடந்தன. இராணுவத்தினது நகர்வுக்கு குறுக்கே உருக்குப் போன்ற உறுதியுடன் நின்று எமது வீரர்கள் போர் புரிந்தனர். இந்தச் சண்டைகளில் 6 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்திருந்தனர்.

இதே சமயம் மன்னார் மாவட்டத்திலும் ஒரு இராணுவ நடவடிக்கையை தொடங்குவதற்கு எதிரிகள் முயன்றுகொண்டிருந்தார்கள். இந்த வேளையில் தான் சிலாவத்துறையிலிருந்து கொண்டைச்சி முகாமுக்கு காடுகளுக்கூடாகச் சென்று கொண்டிருந்த இராணுவ அணி ஒன்றின் மீது கொண்டைச்சியில் வைத்து மூர்க்கத்தனமான தாக்குதல் ஒன்றை நடாத்தினோம்.

17.02.1991 அன்று நூற்றிற்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட இந்த இராணுவ அணிமீது பதுங்கித் தாக்குதல் உபாயத்தின் மூலம் நடாத்தப்பட்ட அதிரடியில் 50 இராணுவத்தினர் உயிரிழந்தனர். இவர்களிடமிருந்து 48 நவீன துப்பாக்கிகள் கைப்பற்றியிருந்தோம்.

இந்த மூர்க்கத்தனமான தாக்குதலுடன் வன்னிமீதான எதிரியின் படையெடுப்பு நிறுத்தப்பட்டது.

சுமார் ஒருவாரகாலம் சிறீலங்கா அரசின் முப்படைகளுடனும் நடந்த சண்டையில் 20புலி வீரர்களை இழந்திருந்தோம்.

வவுனியாவில் ஐந்து போராளிகளும்.

முல்லைத்தீவில் பத்து போராளிகளும்.

மன்னாரில் ஐந்து போராளிகளும் வீரமரணமடைந்துள்ளனர்.

அதேசமயம் 70ற்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொன்று அவர்களிடமிருந்து 53 நவீன துப்பாக்கிகளையும் மற்றும் இராணுவ சாதனங்களையும் கைப்பற்றினோம்.

வன்னிப்பிராந்தியத்திலுள்ள கொக்காவில், மாங்குளம் இராணுவ முகாங்கள் அழிக்கப்பட்டு நூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு சிங்களப்படைகள் சந்தித்த பிரமாண்டமான இராணுவத் தோல்விகளை ஈடுசெய்யும் நோக்குடனேயே மேற்படி படையெடுப்புக்கு சிறீலங்கா அரசு திட்டமிட்டிருந்தது.

முப்படைகளின் துணையுடன் பாரிய எதிர்பார்ப்புக்களுடன் எதிரி நடாத்திய இந்தப்படையெடுப்பு - புலி வீரர்களின் தீரத்தினாலும், அர்ப்பணிப்பு உணர்வுகளினாலும் முறியடிக்கப்பட்டுவிட்டது.

## வவுனியா சிறை...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கி இயங்க முன்னர் அது கைப்பற்றப்பட வேண்டும். இல்லையேல் பெரிய இழப்பை நாம் சந்திக்க வேண்டிவரும்.

இந்த இயந்திரத்துப்பாக்கி 6 அடி உயரக்கம்பி வேலிக்கு அப்பால் வேலியுடன் கிடந்தது. ஆனால், அதற்கு உள்ளே வேலியுடன் சேர்ந்து ஒரு கறையான் புற்று உள்ளது. அதன் உயரம் சுமார் 4 அடி — எனவே இந்தப் புறத்தில் ஏறினால் 2 அடி உயரத்தில் வேலிக்கப்பால் இயந்திரத்துப்பாக்கியிருக்கும்.

சிறைக்கு உள்ளே திட்டமிட்டதைப் போல சகல முனைகளிலும் காவலர்கள் தாக்கப்பட்டனர். சிலர் தாக்குதலைச் சமாளித்தபடி துப்பாக்கிகளுடன் ஓடிச்சென்று அப்பால் இருந்தபடி எம்மை நோக்கித் தாக்கினர். சிலர் கோடரியினால் வெட்டி வீழ்த்தப்பட்டனர். ஆனால் அவர்களது துப்பாக்கிகளை எங்களால் எடுக்கமுடியவில்லை. அந்தத் துப்பாக்கிகள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு அவர்களுடன் இணைக்கப்பட்டுக்கிடந்தது.

பல கைதிகளுக்கு என்ன நடக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள நேரம் பிடித்தது.

இயந்திரத் துப்பாக்கியைக் கைப்பற்றச் சென்ற தோழன் ஒருவன் சொல்கிறான்......

இரும்புக்கம்பி, விறகுக் கொட்டன்களுடன் பாய்ந்தோடிச் சென்ற எம்மைப் பார்த்த அந்தச் சிப்பாய், எம்மைச் சுடுவதற்குப்பதிலாக தலையிலடித்துக் குழறத் தொடங்கினான். எமக்கு எதுவும் விளங்கவில்லை. கறையான் புற்றுக்கு மேலேறிய எனது நண்பன் அங் [illegible] அவன் மீது பாய்ந்து அவனைத் தரையுடன் அமத்திப் பிடித்தான்.

அவனுக்குப் பின்னால் பாய்ந்த நான் அவனது விலா எலும்பு முறியும்வரை இரும்புக்கம்பியால் அடித்தேன். அவன் மூர்ச்சையற்று வீழ்ந்துவிட்டான் என்று சக தோழன் இயந்திரத்துப்பாக்கியைப் பிடித்து இழுத்தான். அப்போதுதான் அந்தச் சிப்பாய் தலையில் அடித்துக் குழறிய காரணம் புரிந்தது.

இயந்திரத் துப்பாக்கியின் அடிப்பாகம் மண்மூடையில் கிடக்க குழல் பகுதி ஒரு சணல் கயிற்றினால் கட்டி காவலரணின் மேல் உள்ள ஒரு கட்டையுடன் இணைக்கப்பட்டிருந்தது. அது சிறையின் வெளிப்புறத்தைப் பார்த்தபடி தொங்கிக் கொண்டு கிடந்தது.

உடனடியாக அதைத் திருப்பி தப்பிஓட முனைந்து கொண்டிருக்கும் கைதிகளை நோக்கிச்சுட அவனால் முடியவில்லை.

காவல் அரண் 2ஐ கைப்பற்றச் சென்ற ஐவரில் செல்வந்தன் மரணமடைய மிகுதி நால்வரும் திரும்புகின்றனர்.

பெண்கள் விடுதிக்கும் ஆண்கள் விடுதிக்கும் இடையில் இருந்த காவல் அரண் 1 ஐக் கைப்பற்ற பெனா தலைமையில் மூவர் சென்றனர், இவர்களும் கம்பி கோடரிகளையே தமது ஆயுதங்களாகக் கொண்டு சென்றனர். பிரிகேடியர் வீட்டுக்குக் காவல் நின்ற இராணுவத்தினரால் இவர்கள் தாக்கப்பட்டார்கள். கணேசலிங்கம் என்பவர் குண்டுபட்டு வீழ்ந்தார். குறிப்பிட்ட காவலரணை அடைய முடியாது மிகுதி இருவரும் திரும்பினர். சிறையை விட்டு தப்பி ஓடும் இறுதிக்கட்டத்தில் பெனாவும் குண்டு பட்டு வீழ்கின்றான்.

பின்னர் சிறீயும் மரணமாகின்றான் மொத்தம் 42 பேர் சிறையை விட்டு பாதுகாப்பாக தப்பினோம்.

எங்கிருந்தோ ஓர் உலங்குவானூர்தி தாளப் பறந்து எமக்கு மேலால் வந்தது. எம்மையே அது இலக்கு வைத்து வருவதாக உணர்ந்து எங்களது தோழர்களது துப்பாக்கிகள் வானை நோக்கி வெடித்தன. ஆனால் எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் அந்த உலங்குவானூர்தி தன்பாட்டில் சென்று விட்டது. கட்டளைகளுக்கு மட்டும் போரிட்டுப் பழகிய அவர்களால் கட்டளைகள் இல்லாது சண்டையிட முடியவில்லை. எதிரியின் அந்த மனஉணர்வு எங்களுக்குச் சாதகமாகிவிட்டது. அது மீண்டும் கட்டளையுடன் திரும்பிவர முன்னர் அவ்விடத்தைவிட்டு விரைவாகக் கடந்துவிடும் நோக்கில் செயற்பட்டோம்.

சிறையுடைப்பு முயற்சியின் போது வீரமரணமடைந்தோர்

**பெனா**
(இ. தியாகராஜா)
விடத்தல் தீவு மன்னார்

**செல்வந்தன்**
(செல்லப்பா பாலேந்திரன்)
இராசேந்திரன்குளம்,
வவுனியா

**கந்தையா கணேசலிங்கம்**
அனந்தர் புளியங்குளம்,
வவுனியா


**சிறீவையாபுரி செல்வம்**
முத்தையன்கட்டு

www.eelamview.com



# வீர வணக்கம்






மேஜர் ராதாரவி
(சி. சிவபாலன்)
முழங்காவில்



மேஜர் சூரி
(ந. நகுலேஸ்வரன்)
இனிதொச்சி



கப்டன் துரைமணி
(க. தவராசா)
செட்டிகுளம்

## மன்னாரில் -

மன்னார் மாவட்டத்தில் ஓர் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கான முன் தயாரிப்பு வேலையில் ஈடுபட்டிருந்த சிறீலங்கா இராணுவ அணி ஒன்று கொண்டைச்சி எனுமிடத்தில் வைத்து எம்மால் வழிமறித்துத் தாக்கப்பட்டது.

17-02-1991 அன்று சிலாவத்துறை படை முகாமிலிருந்து கஜுவத்தை படை முகாமுக்கு கால்நடையாக வந்துகொண்டிருந்த இராணுவ அணி மீது காலை 7.42 மணிக்கு தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. 18நிமிடங்கள் நடந்த இச்சண்டையில் 50ற்கும் மேற்பட்ட சிங்களப் படையினர் கொல்லப்பட்டதுடன், 48 ஆயுதங்களும் எம்மால் கைப்பற்றப்பட்டன.

இச் சண்டையின் வெற்றிக்காக தங்கள் உயிர்களை அர்ப்பணித்த எமது 5 தோழர்களையும் சிரம் தாழ்த்தி நினைவு கூருகின்றோம்.

## சண்டையின் முடிவில் எதிரிகளிடமிருந்து எம்மால் கைப்பற்றப்பட்டவை

| | |
|---|---|
| ஏ. கே. எல். எம்.ஜி | 3 |
| ரி. 56 | 2 |
| ரி. 56-1 | 1 |
| ரி. 56-2 | 30 |
| ரி. 81 | 10 |
| 60 மி.மீ. மோட்டர் | 1 |
| 203 பிஸ்டல் | 1 |
| ஜே. ஆர். கைக்குண்டு | 17 |

இவற்றுடன், ஏராளமான வெடிப்பொருட்களும், இராணுவ சாதனங்களும் கைப்பற்றப்பட்டன.



ஞானமுத்து
(யோண் பற்றிக் அந்தோனி)
பள்ளிமுனை





லெப் ஏகாம்பரம்
(மு. மகாலிங்கம்)
முருங்கன்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com